உ

கணபதி துணை

யாழ்ப்பாணம் அராலி

**இராமலிங்கமுனிவர்**

இயற்றிய

# சந்தானதீபிகை

## மூலமும், உரையும்.

இவை

கொக்குவில்

"சோதிடபரிபாலினி" ஆசிரியர்

**இ. சி. இரகுநாதையரவர்களால்**

பரிசோதிக்கப்பெற்று,

சோதிடப்பிரகாசயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பெற்றன.

இரண்டாம் பதிப்பு.

பிரமாதி௵ பங்குனி௴

1940.

*Registered Copyright.*]

[விலை ~~அணா 8.~~

# நூலாசிரியர் வரலாறு

இந் நூலாசிரியராகிய **இராமலிங்கமுனிவர்,** தில்லைத் தீக்ஷித பரம்பரையைச் சார்ந்து திருவானைக்காவில் ஸ்ரீ ஜம்புகேசுவராலய அருச்சகரு ளொருவராயிருந்து பின்னர் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தை அரசுபுரிந்த கூழங்கைச் சக்கிரவர்த்தியால் சமஸ்தான ஜோதிஷராக யாழ்ப்பாணத்துக்கு அழைக்கப்பெற்று வந்து நல்லூரிற் குடியேறிய ஆதிசைவப்பிராமணகுலதிலக ரொருவரின் வழித்தோன்றலாகிய சந்திரசேகரசாஸ்திரிகளுக்குச் சாலிவாகன சகாப்தம் ௧௫௭௧-க்குச் சரியான விரோதிவருஷத்தில் பிரதமபுத்திரராகப் பிறந்து, சிறுவயதிலேயே வடமொழி தென்மொழி யிரண்டிலும் வல்லராய், வேதாகம புராணாதிகளிலும் வேதபுருஷனுக்கு நேத்திராங்கமாக விதந்தோதப்பெற்ற ஜோதிஷசாஸ்திரத்திலும் அதிபாண்டித்தியம் அடைந்து விளங்கி, சகாப்தம் ௧௫௯0-க்குச் சரியான பிலவங்கவருஷம் வைகாசிமீ ௧௬உ (16-5-1667) வியாழக்கிழமை முற்பகல் ௧௩ அடியளவில் சுக்கிலபக்ஷ திருதியைத்திதியும் புனர்பூச நக்ஷத்திரமும் மிதுனலக்கினமுங் கூடிய சுபமுகூர்த்தத்தில், ஆரியபடசித்தாந்தத்தை ஆதாரமாகக்கொண்டு வரருசிமுனிவர் அருளிச்செய்த வாக்கியகணித விதிப்படி இவ்விலங்கையில் முதன்முதற் பஞ்சாங்கங் கணித்து வெளிப்படுத்த ஆரம்பித்தனர். அப்போது அவருக்கு வயசு ௧௮. இப்பஞ்சாங்கம் அக்காலம் தொடங்கிப் பாரம்பரியமாய் இப்பொழுதும் நடைபெற்றுவருகின்றது.

இதன்மேல் தமது ௩௮-ம் வயசாகிய சகாப்தம் ௧௬௧0-க்குச் சரியான பிரபவவருஷத்தில் பழமொழிப் பிரபந்தம் என்னும் நூலை ஆரம்பித்துச் செய்தனர். அதன்பின்பு தமது ௬௪-ம் வயசாகிய சகாப்தம் ௧௬௩௫-க்குச் சரியான நந்தனவருஷம் தைமீ ௧உ (1-1-1713) குருவாரமும், கிருஷ்ணபக்ஷ பிரதமைத்திதியும், பூசநக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் இல்லறத்தோர்க் கின்றியமையாச் சாதனமாகிய சந்தான பலனை இனிது விளக்கும் வடமொழிச் சந்தானதீபிகையைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடினர். இவருக்கு அக்காலத்து அரசரால் குடிநிலம், விளைநிலங்கள் இராஜமானியமாகக் கொடுக்கப்பட்டிருந்தன. இவருடைய பிற்சந்ததியினரின் வரலாற்றினைப் பரகிதகணித முகவுரையிற் காண்க.

---

# பதிப்புரை

இச் சந்தான தீபிகை யாழ்ப்பாணத்திலுள்ள சோதிடர்கள் பலரிடத்தும் ஏட்டுப்பிரதியாக உள்ளது. இந்நூலாசிரியருடைய முன்னும் பின்னுமுள்ள சந்ததியாருட் பலர் இந்தியாவில் தங்கள் பந்துக்களைப் போய்க் கண்டுவரும் வழக்கம் அக்காலத்திலிருந்தமையால் இந்நூல் அங்குஞ் சென்று பிரசித்திபெறலாயிற்று. இதன் மூலபாடம் முதன்முதல் சகாப்தம் ௧௭௯௧-க்குச் சரியான (கி. பி. 1868) விபவருஷத்தில் பிட்சைப்பாக்கம் கணிதநூற்புலவர் மார்க்கலிங்க ஜோதிஷரவர்களால் பார்வையிடப்பட்டு புரசைப்பாக்கம் விவேக விளக்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

இவ்வச்சுப்பிரதியும் மற்றைய ஏட்டுப்பிரதிகளும் காலாந்தரத்தி லியல்பாகவேற்பட்ட வழுக்கணிறைந்து பயன்படாதிருத்தலைக் கண்ட யாழ்ப்பாணம் இரகுநாதையர் சோதிடபரிபாலனமடபரிபாலகரும் எமது தந்தையாருமாகிய ச. இ. சிவராமலிங்கையர் அவர்கள், இந்நூலாசிரியரின் சந்ததியினரும், வடமொழி தென்மொழி டச்மொழி என்னும் மூன்று மொழியினும் வல்லராய் மூவரம்மானை திருநல்லைக் கிள்ளைவிடுதூது வண்ணைக்குறவஞ்சி முதலிய சில பிரபந்தங்களும் நித்தியகன்மவிதி சிவபூசாவிதி முதலிய சமயாசார நூல்களும் உரைகளும் செய்து சிவபூசாதுரந்தரராய் மிகப் பிரசித்திபெற்று விளங்கிய நா. சந்திரசேகரசாஸ்திரிகளின் பிரபௌத்திரருமாகிய பிரமஸ்ரீ சு. நடராசையரவர்களைக் கொண்டு பரிசோதிக்கச்செய்து, அவரைக் கொண்டே ஓர் பொழிப்புரையு மெழுதுவித்து, சகாப்தம் ௧௮௨௩-க்குச் சரியான சார்வரி௵ மாசி௴ இதன் முதற்பதிப்பை வெளியிட்டனர்.

முதற்பதிப்புப் பிரதிகள் பல வருடங்களுக்கு முன்னரே செலவாய்விட்டமையாலும், பின்னற் கிடைத்த பல பிரதிரூபங்களைக் கொண்டு ஆராய்ந்தபோது மூலபாடத்திலும் உரையிலும் பல திருத்தங்கள் செய்யப்படவேண்டியிருந்தமையாலும் அத் திருத்தங்களைச் செய்து இந்த இரண்டாம் பதிப்பை வெளியிட்டிருக்கின்றேம். அறிஞர்கள் இன்னும் பிழைகளிருப்பக் காணின் எமக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேம்.

சோதிடபரிபாலனமடம்,<br>கொக்குவில்.<br>பிரமாதி௵ பங்குனி௴

இங்ஙனம்<br>இ. சி. இரகுநாதையர்

உ

கணபதிதுணை

# சந்தான தீபிகை

## மூலமும் உரையும்.

### பாயிரம்.

#### கடவுள்வாழ்த்து.

1\. கடலான கலைஞான தேசிகனைக்
 கயமுகனைக் குகனைக் கான்சூழ்
மடலார்தண் பூவினிலு நாவினிலும்
 வதிந்தருளும் வாணி மானை
யடலாரு மொன்பதுகோ ளாகியவா
 னவர்கடமை யடிய னேன்ற
னிடரான தறத்துரப்பீ ரருள்சுரப்பீர்
 புரப்பீரென் றிறைஞ்சு வேனே.

(இதன் பொருள்.) கடல்போலக் கரைகாண்டற்கரியனவாய் ஆழ்ந்து விரிந்த கலைகளையெல்லாம் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த எனது ஞானாசிரியரையும், யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளையும், முருகக்கடவுளையும், நறுமணஞ்சூழ்ந்த இதழ்கணிறைந்த குளிர்ச்சியாகிய வெண்டாமரைப்பூவின்மேலும் கற்றோர் நாவின்கண்ணும் வீற்றிருந்தருளுங் கலைமகளையும், பழவினைகாரணமாக உயிர்கணுகரற்கமைந்த சுகதுக்கங்களை அவ்வக்காலத்திற் றவறாது அவ்வுயிர்களையடைவித்தற்கு ஈசுவரனிடத்துப் பெற்றுக்கொண்ட வலிமை நிறைந்த சூரியன் முதலிய நவக்கிரகங்களாகிய தேவர்களையும் இந்நூல் செய்யுமிடத்து அடியேனுக்குளவாகும் இடையூறுகளை முற்றக் கடிந்தருளுங்கள்! கிருபைபாலித்தருளுங்கள்! அடியேனை இரக்ஷித்தருளுங்கள்! என்று பிரார்த்தித்து நமஸ்கரிக்கின்றேன். என்றவாறு. (௧)

## நூல்செய்தவர்.

2. நன்னூலாம் வடமொழிச்சந் தானதீ
பிகையதனை நலங்குலாவு
தென்னூலாய் பவர்தாமு மாராய்ந்து
கொண்டாடத் தெரித்தல் செய்தான்
மின்னூலா மிடைவாணி மெய்யருளா
னெஞ்சகத்தும் புறத்துமேவு
முன்னூலான் சந்திரசே கரன்புதல்வ
னிராமலிங்க முனிவன் றானே.

(இ - ள்:) மின்னுக்கொடிபோலும் இடையையுடைய சரசுவதியினது மெய்ம்மையாகிய திருவருளினால் தமது மனதினுள் முன்னை நூற்கருத்துக்களையும் தமது மார்பின்மீது விப்பிரகுலத்துக் கமைந்த முப்புரிநூலையுமணிந்த சந்திரசேகரையருடைய பிரதம புத்திரராகிய இராமலிங்கமுனிவர், நல்லநூலாகிய வடமொழிக்கணுள்ள சந்தானதீபிகையைத் தமிழ்மொழிப் பயிற்சியுடையாரும் ஆராய்ந்து கொண்டாடும்படி, நலம்விளங்குகின்ற தமிழ்நூலாய் மொழிபெயர்த்து விளக்கிப்பாடினார். எ - று.

"மின்னூலாம்" என்றதற்கு மின்னும் நூலும் போலும் என்று பொருளுரைப்பினுமமையும். முந்நூல் எதுகைநோக்கி முன்னூல் என்று விகாரமாயிற்று. இச்செய்யுள், இந்நூலாசிரியருடைய கனிஷ்டரும் மாணாக்கருமாகிய வேங்கடேசசாஸ்திரிகள் செய்தது. (உ)

## நூற்பொருள்.

வேறு

3. செல்வ மைந்தரி லாததுஞ் சேர்வதும்
புல்லு தத்தப்பு தல்வர்கி டைப்பது
மல்கு புத்திர சேதமு மைந்தர்க
ளல்க றானும்பெ ருகல ளவையும்.

4. நோயு மாரண முந்திரு நோக்குந்தா
னாயு மாந்த ரறியவ டமொழித்
தேய்வில் சந்தான தீபிகை தன்னையா
னேயுந் தென்மொழி யாலின்றி யம்புகேன்.



(இ - ள்:) ஒருவனுக்குப் புத்திரப்பேறு இலதாதலும், உளதாதலும், தத்தபுத்திரர் கிடைத்தலும், புத்திரர் பிறந்திறத்தலும், அற்பபுத்திரர் பிறத்தலும், வெகுபுத்திரர் பிறத்தலும், நோயும், மரணமும், செல்வமும், தரித்திரமும் என்னும் இவைகளை ஆராய்தல்வேண்டும் என்னும் விருப்புடைய தமிழ்மொழிப் பயிற்சி மாத்திரமேயுடையார் அறிந்துய்தற்பொருட்டுக் குறைதலில்லாத வடமொழிச் சந்தானதீபிகையை இயைந்த தமிழ்மொழியிற் பெயர்த்து இப்பொழுது நான் பாடுகின்றேன். எ - று.

இந்நூல், இருளின் மறைந்துகிடக்கும் பொருள்களைக் கண்ணுக்குப் புலனாகச்செய்யுந் தீபம்போலக் கிரகநிலையின் மறைந்துகிடக்கும் ஐந்தாம்பாவபலமாகிய சந்தானபலத்தைப் புலப்படக் காட்டுதலின் "சந்தானதீபிகை" என்னும் பெயருடைத்தாயிற்று. இது இலக்கினபாவ முதலிய மற்றைப் பாவபலங்களையும் ஒருங்கு கூறுமேனும், சந்தானபலத்தையே மிகுத்துச் சொல்லுதலின் அப்பெயர் மிகுதிபற்றிய குறியாயிற்று. இதுபற்றியே இந்நூலாசிரியர் ஐந்தாம் பாவத்தை முதலில் வைத்தார். (௩, ௪)

## அவையடக்கம்.

5. நீதி வித்தகர் சொற்றிடு நீள்பொரு
ளாத லிற்கற் றமைந்தபு லமையோர்
ஈதி னைத்தளித் தேன்கொளல் போலென்சொற்
கோதி னைத்தளிக் கொள்வர்பொ ருளையே.

(இ - ள்:) நான் இப்பொழுது பாடும்படி எடுத்துக்கொண்ட பொருள் சோதிடநூற்றுறையிற் றெளிவடைந்த சாதுரியர்களாற் சொல்லப்படும் விசிட்டமுடைய பொருளாதலின், தேனைக் கிரகிப்பவர்கள் ஈ முதலிய குற்றங்களை நீக்கி அத்தேனைமாத்திரங் கிரகித்துக் கொள்ளுதல்போலக் கற்றறிந்தடங்கிய சான்றோர்கள் என்சொல்லாகிய குற்றத்தைக் கடிந்து பொருளைமாத்திரங் கிரகித்துக்கொள்வார்கள். எ - று. (௫)

பாயிரம் முற்றிற்று.

# ஐந்தாம் பாவம்.

## மலடன்.

6. அடையு மோரையொ டைந்தினுக் கேழினுக்
குடையர் பொன்வலி குன்றவு தித்துளோன்
மடந டைப்புதல் வர்ப்பெறு மாண்பிலான்
றொடைதொ டித்துச்சொ ருகுங்கு ழலியே.

(இ - ள்:) இலக்கினாதிபதியும், ஐந்தாதிபதியும், ஏழாதிபதியும், குருவும் தத்தம் வலிகுறைந்திருக்கப் பிறந்தவன் புத்திரப்பேறில்லாதவனேயாவன். எ - று.

இலக்கினாதிபதி வலியிழத்தலினால் தேகவலிமை கெடுதலும் அரிட்டசம்பந்தமும் அமைதலின் அக்கேடு புத்திரப்பேற்றிற்குப் பெரிது மிடையூறுமென்றும், தார சுகானுபவப் பேறில்லாதார்க்குப் புத்திரப்பேறு சம்பவியாமையின் தாரானுபவத்தைக் கொடுக்கின்ற ஏழாதிபதி வலியிழத்தல் புத்திரப்பேற்றிற் கிடையூறுமென்றும், பூர்வபுண்ணிய நிலைபேறைத் தெரிவிக்கின்ற வியாழன் அப்பேற்றாலடையும் முதன்மையான பலனைக் காட்டுகின்ற புத்திரகாரகனாதலின் அவன் வலியிழத்தல் புத்திரப்பேற்றிற் கிடையூறுமென்றும், ஐந்தாமிடம் புத்திரத்தானமாதலாலும் அவ்வதிபதி இன்றியமையாது புத்திரப்பேற்றிற்கு வேண்டப்படுபவனாதலாலும் அவன் வலியிழத்தல் தப்பாது புத்திரப்பேற்றிற் கிடையூறுமென்றும் விளக்குவார் "அடையு மோரையொ டைந்தினுக் கேழினுக் குடையர் பொன் வலிகுன்ற வுதித்துளோன் மடநடைப் புதல்வர்ப் பெறு மாண்பிலான்" என்றார். வலிகுன்றுதலாவது: ஆறு எட்டுப் பன்னிரண்டாமிடங்களினிற்றல், பகைநீசத் தானங்களினிற்றல், பாடடைதல், பாபக்கிரகதிருஷ்டிபெறுதல், அவர்களோடு சகிதமாதல் முதலியன.

இந்நூலாசிரியர் ஐந்தாமிடத்தாற் பெறப்படும் சந்தானம், பிதா, மாமன், பூர்வபுண்ணியம், யுத்திசாதுரியம், வித்தை, மந்திரம், உத்தியோகம் முதலிய பல பலன்களுட் சந்தானபலனையே பிரித்தெடுத்துக்கொண்டார். இல்லறத்தோர்க் கின்றியமையாச் சாதனமாய் எல்லாச் சுகானுபவங்களையும் அவர்க்குளவாக்குவது அதுவேயாகலின். (௧)



7. அஞ்சிற் றீயனு றவதற் காதிப
னெஞ்சி னீசத்தி னெய்தவி வர்களை
வஞ்சந் தீர்சுபர் நோக்கற வந்துளோன்
கொஞ்சு மின்சொற்கு மாரின் றாவனே.

(இ - ள்:) ஐந்தாமிடத்திற் பாபக்கிரகமிருக்க, ஐந்தாதிபதி நீசத்தானத்திருப்ப, இவர்களைச் சுபக்கிரகங்கள் பாராதிருக்க அக்காலத்துப் பூமியிற் சனனமானவன் மலடனேயாவன். எ - று.

"எஞ்சினீசம்" என்னும் விதப்பால் அதிநீசம், பாடு முதலியனவும் அடங்குதல்காண்க. "வஞ்சந்தீர் சுபர்" என்றது நீசம் பாடு முதலிய தோஷங்களாற் பெலகீனமடையாத சுபரை. ஐந்தாமிடத்திற் சுபக்கிரகங்களிருக்க, ஐந்தாதிபதி உச்சத்தானத்திருப்ப, அவர்களைச் சுபக்கிரகங்கணோக்குதல் செய்தலாகிய புத்திரயோகமும் இதனாற் பெறப்பட்டது. (௨)

8. வில்லின் மீனின்வி யன்மதி சேர்தரப்
புல்லு மைந்தினிற் பாபர்பொ லிவுற
நல்லர் நோக்கிவர்க் கற்றிட நண்ணினோற்
கில்லை யில்லையெ ழில்கெழு மைந்தரே.

(இ - ள்:) தனுவிலாதல் மீனத்திலாதல் சந்திரனிருக்க, ஐந்தாமிடத்திற் பாபக்கிரகங்களிருக்க, இவர்களையுஞ் சந்திரனையும் சுபக்கிரகங்கள் பாராதிருக்க அக்காலத்திற் பிறந்தவன் மலடனேயாவன். எ - று. (௩)

9. ஐந்திற் பாபர்பு குதவ திபதி
நைந்து பாபர்ந டுவினி னண்ணியே
யுந்து மாறிரண் டாறெட்டு றச்சுபர்
வந்து பார்ப்பதின் றேன்மல டாவனே.

(இ - ள்:) புத்திரத்தானத்திற் பாபக்கிரகங்களிருக்க, புத்திரத்தானாதிபதி பாபக்கிரகங்களுக்கிடையே ஆறு எட்டு பன்னிரண்டு ஆகிய தானங்களிற் பெலங்குன்றியிருக்க, இவர்களுக்குச் சுபக்கிரகங்களோடு கூடுதலாதல் அவர் நோக்கமாதல் இல்லாதிருக்க அக்காலத்திற் பிறந்தவன் மலடனேயாவன். எ - று.

ஙிருபுத்ர ரொருபுத்தி ரற்பெற்று வாழ்வோ
ஙிளமைந்தர் பலபேரை யீனத்த காணு
லொருசித்ர வுருவத்தை நிகரொத்த வடிவ
முள்ளகுயி லேயமுத வள்ளவிதழ் மயிலே.

(இ - ள்:) தனு புத்திரத்தானமாக, அதிற் புத்திரகாரனாகிய குரு வீற்றிருக்க, உதயலக்கினத்தைப் பாபக்கிரகங்கள் பார்க்க அக்காலத்துப் பிறந்தோன் இரண்டு புத்திரர் அல்லது ஒரு புத்திரனைப் பெற்று வாழத்தகுவனேயன்றிப் பல புத்திரரைப் பெற்று மகிழும் பாக்கியம் இல்லாதவனேயாவன். எ - று.

காரகர்கள் காரகத்தானத்திருத்தல் அக்காரகத்துவத்துக்குப் பங்கமாம் என்பது சோதிட நூற்சித்தமாகலின் "வருபுத்திரத் தானம் வரிவில்லதாக மகிழ்பொன் புகுந்தந்த மனையுற்றிருத்தலும்", உதயலக்கினத்தைப் பாபக்கிரகங்கள் பார்த்தலும் புத்திரவிருத்தியைக் குறைத்தற்கேதுவாதல் காண்க. (கூ)

## அற்பபுத்திரர், வெகுபுத்திரிகள்.

15\. ஐந்தான தானத்தி னதிபதி கலைசா
லம்புலித னைச்சுங்க னைக்கூடி யடைவே
வந்தான கேந்திரமு றப்பொன்ன வன்றன்
மாபாப ரைக்கூட வன்பாப ரைந்திற்
சிந்தாகு லப்பார்வை செய்யுமமை யத்தே
செகமீது திக்குந்தி றற்புருட னீனுஞ்
சந்தான மதுதன்னி லாண்மகவு குன்றுந்
தருகின்ற பெண்மகவு தழைவெய்தி மிகுமே.

(இ - ள்:) புத்திரத்தானதிபதி கலைநிறைந்த சந்திரனையேனுஞ் சுக்கிரனையேனுங் கூடித் தான் வலிபெறுதற்கனுகூலமாகிய கேந்திரத் தானத்திருக்க, பிருகஸ்பதி கொடிய பாபக்கிரகங்களோடு கூடப் புத்திரத்தானத்தைப் பாபக்கிரகங்கள் பார்க்க அக்காலத்துப் பூமியிற் சனனமான புருடன் பெறும் மக்களுள் ஆண்மக்கள் குறைவடையப் பெண்மக்கள் பெருக்கமடைந்து சிறந்து வாழ்வார்கள். எ - று.

கேந்திரங்களுன்கினும் எல்லாக் கிரகங்களும் ஒப்ப வலி பெறுதற்கேலாமையின் "அடைவே வந்தான கேந்திரமுற" என்று



விசேடித்தார். புதனுக்குங் குருவுக்கும் லக்கினகேந்திரமும், சந்திர னுக்குஞ் சுக்கிரனுக்கும் நீர்க்கீழாகிய சதுர்த்தகேந்திரமும், சனி ராகுகேதுக்களுக்குப் பாடாகிய சப்தமகேந்திரமும், சூரியனுக்கும் அங்காரகனுக்கும் உச்சியாகிய தசமகேந்திரமும் வலிபெறுதற்கனு கூலமாகிய கேந்திரங்களாம். சுக்கிரனுக்கு நீர்க்கீழேயன்றி உதய மும், சனிக்குப் பாடேயன்றி உச்சியும் அனுகூலமாம் என்பதும் ஒருசாரார் மதம்.

புத்திரத்தானதிபதி ஸ்திரீக்கிரகங்களோடு கூடி வலிபெறுதல் பெண்மகவு விருத்தியாதற்கும், புத்திரகாரகனும் புத்திரத்தான மும் வலிகுன்றப்பெறுதல் ஆண்மகவு சுருங்குற்கும் ஏதுவாயின. (க0)

## புத்திரிகள்நாசம், வெகுபுத்திரர்.

16\. சாமனுட னேமனிவ ரைந்தினதி பதியைத்
தானணுகி நன்கேந்தி ரத்தினிடை தங்கச்
சோமனுட றேய்பவனி ருஞ்சனியி ராகு
துலங்கிவரு மைந்தில்விழி வைக்கவரு தோன்ற
னேமிபுடை சூழுலகி லேயருண்ம காரி
னீதியுறு மாண்மகவு நீடியுயிர் வாழுங்
காமனடி பேணவரு காமர்மட மானே
காதலுறு பெண்மகவு காசினியி ராதே.

(இ - ள்:) புதனுங் குருவும் புத்திரத்தானதிபதியைக் கூடிக் கேந்திரத்தானத்திற் பெலமேறியிருக்க, அபரசந்திரனுஞ் சனிராகுக் களும் புத்திரத்தானத்தைப் பார்க்க அக்காலத்திற் சனனமான வனுக்குப் பிறக்கும் மக்களுள் ஆண்மக்கள் மனமகிழும்படி நீடித் துயிர்வாழ்வர்; பெண்மக்கள் அங்ஙனம் வாழாது ஆயுள்குன்றி மடிவர். எ - று.

புத்திரப்பேற்றிற்கனுகூலமாகப் பெலமேறிய ஐந்து என்பது தோன்றத் "துலங்கிவருமைந்து" என்றார். (கக)

## தத்தபுத்திரர்.

17\. இயலைந்து புதன்வீடு சனிவீட தாக
விதின்மந்த னைனு மிவன்மைந்த னேனு
நயமொன்றி நின்றனு நயனஞ்செய் தானு
நவிலைந்தின் வலிதுன்றி நனிநல்லர் தங்கப்

பயிலைந்தி னதிபன்ற னைத்தூய ரானோர்
பாராமல் விடினும்ப டிக்கேபி றக்குஞ்
செயலொன்று புருடன்சி றாரைப்பெ றானே
திகழ்தத்த புத்ரச்சி றப்பெய்து வானே.

(இ - ள்:) புத்திரத்தானம் புதனுக்கும் சனிக்குமுரிய இராசிகளுள் ஒன்றாக, அதிற் சனியேனும் குளிகனேனும் அதிபெலமுற்றிருப்பினும், அன்றி அதைப் பார்ப்பினும்; புத்திரத்தானத்தில் அதிசுபக்கிரகங்கள் வலிபெற்று வீற்றிருப்பப் புத்திரத்தானாதிபனைச் சுபக்கிரகங்கள் பாராதொழியினும் அக்காலத்திற் பிறந்தோன் தான் புத்திரர்களைப் பெறமாட்டான்; பிறர்புத்திரரைத் தத்தபுத்திரராகப் பெற்றுமகிழும் பேறுடையனாவன். எ - று. (௧௭)

## புத்திரிவிருத்தி.

18. குளிர்பால கத்தான மாகப்பொ னுறினுங்
குறையாமல் வளர்சந்தி ரன்வந்து புகினு
மொளிர்பால கத்தான மதனிற்பொன் வெள்ளி
யுற்றுரிமை யுச்சமுறி னுஞ்சுங்க னைந்திற்
றெளிவார்க லைச்சந்தி ரற்கூடி நட்பாய்த்
திகழ்காணி யாயுச்ச மாய்ச்சேர்வ னேனு
நளிரார்க டற்பூமி யிடையேபி றந்தோ
னவில்பெண்சி றார்தம்மை நனிநல்கு வானே.

(இ - ள்:) கர்க்கடகம் புத்திரத்தானமாக அதிற் குரு வீற்றிருப்பினும், அன்றிப் பூரணசந்திரன் அதில் வந்திருப்பினும், புத்திரத்தானத்திற் குருவோடு சுக்கிரனுங் கூடி ஆட்சியேனும் உச்சமேனும் பெற்றிருப்பினும், அன்றிச் சுக்கிரன் பூரணசந்திரனோடுங் கூடி நட்பாட்சியுச்சங்களுள் ஒன்று பெற்றுப் பெலமேறி அதில் இருப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் புத்திரிகளையே மிகவும் பெற்று மகிழ்வன். எ - று.

ஸ்திரீராசியாகிய கர்க்கடகம் குருவுக்கு உச்சக்ஷேத்திரமாதலாலும், அது புத்திரத்தானமாகவே அக்குருவுக்குப் புத்திரகாரகத்துவ பங்கம் வருதலாலும், சந்திரனுக்கு அது சுவக்ஷேத்திரமாதலாலும், சந்திரன் தேகசுககாரகத்துவமுடைய ஸ்திரீக்கிரகமாதலாலும், கர்க்கடகம் புத்திரத்தானமாக அதிற் குருவிருத்தலும்; சந்திரனிருத்



தலும்; புத்திரத்தானத்திற் புத்திரகாரகத்துவ பங்கமெய்திய குருவோடு போககாரகனும் ஸ்திரீக்கிரகமுமாகிய சுக்கிரன் உச்சசுவக்ஷேத்திரத்தான பெலம்பெற்றிருத்தலும்; அச்சுக்கிரன், மேற்சொல்லிய சந்திரனோடுங் கூடிப் புத்திரதானத்தில் உச்ச சுவ மித்திருக்ஷேத்திரத்தான பலமெய்தி வீற்றிருத்தலும் புத்திரிவிருத்திக்கேதுவாதல் காண்க. "உயர்பாலகத்தானமதனிற் பொன்வெள்ளியுற்றுரிமையுச்சமுறினும்" என்றதற்குக் குருவும் சுக்கிரனும் முறையே சுவக்ஷேத்திரமும் உச்சக்ஷேத்திரமுமாகிய தனுவிருத்தலும் மீனத்திலிருத்தலும் என்று பொருள்கொண்டு அதுவும் புத்திரிவிருத்தியோகங்களுள் ஒன்றாதல் காண்க. உரிமை உச்சமாதியவற்றை அங்கிசமாகக்கொண்டு பொருளுரைத்தலும் ஒன்று. (௧௮)

## புத்திரவிருத்தி.

19. ஆடாத றேளாத லைந்தான தான
மாகப்பு தன்வெள்ளி யமரேச னாசான்
வாடாம லதிலுற்றி ருந்தாலு நோக்கம்
வைத்தாலு மைந்தாதி வலிதுன்றி யெய்தப்
பீடாரு மோரேச னுங்கூடி நிற்கப்
பிறங்கைந்தி னைப்பாபர் பாராமல் விடினும்
வீடாத புவியிற்பி றந்தோன றந்தேர்
வெகுபுத்தி ரர்ப்பெற்று மிகவாழு வானே.

(இ - ள்:) மேடமாதல் விருச்சிகமாதல் புத்திரத்தானமாக, அதிற் புதனுங் குருவுஞ் சுக்கிரனும் கூடிப் பெலமுற்று வீற்றிருப்பினும், அன்றி அதைப்பார்ப்பினும், புத்திரத்தானாதிபதி பெலமேறிப் புத்திரப்பேற்றிற்கனுகூலமாகிய தானமொன்றிலிருக்க, லக்கினாதிபதியும் அப் புத்திரத்தானாதிபதியோடு கூட, புத்திரத்தானத்தைப் பாபக்கிரகங்கள் பாராதொழியினும் அக்காலத்துப் பிறந்தவன் தருமசிந்தையுள்ள வெகுபுத்திரர்களைப் பெற்று மனமகிழ்ந்து வாழ்வான். எ - று.

தனுவுதயமாக மேடத்திற் புதனுஞ் சுக்கிரனுங் குருவும் இருத்தல்; கர்க்கடகம் உதயமாக விருச்சிகத்திற் புதனுஞ் சுக்கிரனுங் குருவும் இருத்தல்; தனு உதயமாக அதிற் குருவும், துலாத்திற் புதசுக்கிரரும் இருந்து மேடத்தைப் பார்த்தல்; தனு லக்கினமாகச் சிங்கத்திற் குருவும், துலாத்திற் புதசுக்கிரரும் இருந்து மேடத்தைப்

பார்த்தல்; கர்க்கடகம் உதயமாக அதிற் குருவும், இடபத்திற் புதசுக்கிரரும் இருந்து விருச்சிகத்தைப் பார்த்தல்; கர்க்கடகம் உதயமாக மீனத்திற் குருவும், இடபத்திற் புதசுக்கிரரும் இருந்து விருச்சிகத்தைப் பார்த்தல் என்னுமாறுமே "ஆடாத றேளாத லேந்தானதானமாகப் புதன் வெள்ளி யமரேச ஞசான் வாடாம லதிலுற்றிருந்தாலு நோக்கம் வைத்தாலும்" என்றதனுற் பெறப்படும் வெகுபுத்திரயோகங்களாதல் காண்க. (கச)

20. மீனம்வி ருச்சிகம் விற்சிங்க மேடம்
விஞ்சஞ்ச தாயிதில் விளங்கார லெய்த
வானந்தொ மூந்தேசி கன்பார்வை செயினும்
வருபுத்தி ரத்தான மனையாதி பன்ரு
னீனந்த ராநல்ல ரைக்கூடி ஞலு
மிவர்பார்வை பெற்ருலு மியனல்ல ருக்குத்
தானஞ்சொ னடுவாக நற்பார்வை யுறினுந்
தலத்தேபி றந்தோன்ற னக்குண்டு மகவே.

(இ-ள்:) மீனம், விருச்சிகம், தனு, சிங்கம், மேடம் என்னும் ஐந்தனுள் ஒன்று புத்திரத்தானமாக, அதில் அங்காரகன் வீற்றிருக்கக் குரு அவ்வங்காரகனைப் பார்ப்பினும், புத்திரத்தானுதிபதி புத்திரப்பேற்றிற்கனுகூலராகிய சுபக்கிரகங்களோடு கூடினுலும், அவர்கள் திருஷ்டிபெற்ருலும், அன்றிச் சுபக்ஷேத்திரத்திற் சுபக்கிரகமத்தியிற் சுபதிருஷ்டிபெற்றிருப்பினும் அக்காலத்திற் பிறந்தவன் வெகுபுத்திரர்களைப் பெற்றுமகிழும் பேறுடையனுவன். எ-று.

புருடக்கிரகங்களுக்குரிய இராசிகளுள் ஒன்று புத்திரத்தானமாக அதிற் புருடக்கிரகமாகிய அங்காரகன் இருந்து புத்திரகாரகனுகிய குருவின் பார்வைபெறுதலும், புத்திரத்தானுதிபதி "ஈனந்தரா நல்லரைக் கூடல்" முதலியவாகச் சொல்லிய பெலமடைதலும் வெகுபுத்திரப்பேற்றிற்கனுகூலமாதல் காண்க. (கரு)

## சற்புத்திரர்.

21. பேசுஞ்சு தத்தான முடையோன விடமே
பெலமாக வுற்ருலு மவனேழி னெய்தத்
தேசொன்ற வருமோரை யிற்பாப ரிருகண்
செய்யாம னில்லாமல் விடினுஞ்செ ழும்பொ



னேசின்றி யைந்தேழி னெய்தியிட வெய்யோ
ரிகற்பார்வை யோரைக்கி லாதும்பி றந்தோ
னேசந்த ரும்பால ரைப்பெற்று வாழ்வோ
னெஞ்சுகளி கூரமொழி கொஞ்சுமொரு கிளியே.

(இ-ள்:) புத்திரத்தானுதிபதி புத்திரத்தானத்திற் பெலமுற்றிருப்பினும், புத்திரத்தானுதிபதி ஏழாமிடத்திருக்க லக்கினத்திற் பாபக்கிரகங்கள் இருத்தலேனும் பார்த்தலேனும் செய்யாதொழியினும், குரு புத்திரத்தானத்திலேனும் ஏழாமிடத்திலேனும் வீற்றிருக்க லக்கினத்துக்குப் பாபக்கிரகநோக்கம் இல்லாதொழியினும் அக்காலத்துப் பிறந்தோன் தன்னெஞ்சில் அன்புமிகுவதற்கேதுவாகிய குணங்கள் அமைந்த சற்புத்திரரைப் பெற்று வாழ்வோனுவன். எ-று.

பெலமாகவுறுதல் - உச்ச சுவ மித்துரு க்ஷேத்திரத் தான பெல முதலிய பெலமெய்தல். ஒருவனிடத்தமையுங் குணங்களைக் கண்ணுடி போற் புலப்படக் காட்டுதலின் "தேசொன்றவரு மோரை" என்று விதந்தார். சுபக்கிரகசம்பந்தம்பெற்ற ஓரை என்பது தோன்ற அங்ஙனம் விசேடித்தாரெனினும் அமையும். பாபக்கிரகங்கள் லக்கினத்தில் இருத்தலும் அதைப் பார்த்தலும் துர்க்குணங்களையே புலப்படுத்தலின் "ஓரையிற் பாப ரிருகண் செய்யாம னில்லாமல் விடினும்" என்றும், "வெய்யோ ரிகற்பார்வை யோரைக்கிலாதும்" என்றுங் கூறினர். மூடம், பாடு முதலிய ஊனங்களை விலக்குதற்குச் "செழும்பொன்" என்றும், சத்துருநீச க்ஷேத்திரங்களை விலக்குதற்கு "ஏசின்றி" என்றுங் கூறினர். புத்திரத்தானுதிபதியேனும் புத்திரகாரகனேனும் புத்திரயோகத்தானங்களிலிருத்தல் புத்திரப்பேற்றிற்கும், லக்கினம் பெலமுறுதல் புத்திரரின் சற்குணவிருத்திக்கும் அனுகூலமாதல் காண்க. (கசு)

வேறு.

22. வைக்குஞ்சு தத்தான வதிபன்பெ லத்தே
மருவிச்சு பர்க்குநடு வைகச்சு பத்தோ
ருய்க்குஞ்செ ழும்பார்வை வைத்தாலும் விற்றே
ளொண்மீன மறிசிங்க மோரைந்த தாகத்
தொக்கிந்த மனையாளர் புருடாங்கி சத்தே
சொல்லாணி ராசிதனி லெய்தித் துலங்கப்
புகக்கிந்த வுலகிற்பி றந்தோன ளிக்கும்
புகழ்தூன்ற வளர்கின்ற பலமைந்தர் தமையே.

(இ - ள்:) புத்திரத்தானாதிபதி பெலமேறிச் சுபக்கிரகமத்தியில் வீற்றிருக்கச் சுபக்கிரகங்கள் அவனைப் பார்ப்பினும், தனு, விருச்சிகம், மீனம், மேடம், சிங்கம் என்னும் இவைகளுள் ஒன்று புத்திரத்தானமாக, அப் புத்திரத்தானாதிபதி புருடாங்கிசம் பெற்றுப் புருடராசியிற் பெலமுற்று வீற்றிருப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் தனக்குக் கீர்த்தி மிகவுண்டாக வளர்கின்ற சற்புத்திரரைப் பெறுவன். எ - று. (கஎ)

வேறு.

23. ஓரையி னிறைவ னோடுக் குரியனோ ருழியுற் றாலு
நேரதாய்த் தம்மிற் றாமே நிலையுற நோக்கி னாலு
மேர்கெழு மிராசி நாத னுடனைந்துக் கிறையுற் றாலும் [ய்.
பார்வைசெய் திடினுஞ்செல்வப் பாலரைப் பெறுவன்பாவா

(இ - ள்:) இலக்கினாதிபதியும் புத்திரத்தானாதிபதியும் ஒரு க்ஷேத்திரத்திருப்பினும், அன்றி ஒருவரையொருவர் பெலமாகப் பார்ப்பினும், சந்திரலக்கின அதிபதியோடு புத்திரத்தானாதிபதி கூடியிருப்பினும், அன்றி ஒருவரையொருவர் பார்ப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் சற்புத்திரரைப் பெறுவன். (கஅ)

24. மருவுபுத் திரத்தா னத்தின் மன்னவ னோரை மன்ன
னிருவரு நோக்கத் தோன்று மேந்தற்கு மகவு தோன்று
மரியநட் பாட்சி யுச்ச ராசியங் கிசமா யைந்திற்
குரியனின் றாலு நல்ல மைந்தரை யுயிர்ப்பன் மாதோ.

(இ - ள்:) இலக்கினாதிபதியும் புத்திரத்தானாதிபதியும் இலக்கினத்தைப் பார்ப்பினும், புத்திரத்தானாதிபதி நட்பாட்சியுச்சராசியங்கிசங்களிற் பெலமேறியிருப்பினும் அக்காலத்துப் பிறந்தோன் சற்புத்திரரைப் பெற்று மகிழ்வன். எ - று. (கக)

## துர்ப்புத்திரர்.

25. சத்துரு நீச மான விராசியங் கிசங்க டன்னி
லொத்திடுஞ் சுதத்தா னத்துக் குரியவ னுற்று மேவ [க்
வித்தலை தோன்றி னோன்று னீனும்புத் திரர்கள் பொல்லா
குத்திர முடையர் மித்ரக் குணமிலார் கொடியன் னோளே.



(இ - ள்:) புத்திரத்தானாதிபன் பகைநீசவிராசியங்கிசங்களிலிருக்க அக்காலத்துப் பிறந்தவன் பெறும் புத்திரர்கள் பொல்லாத வஞ்சனையுடையவர்கள்; நற்குணமில்லாதவர்கள். எ - று. (உ0)

## அதிக புத்திரிகள்.

26. நள்ளியாய்க் கோலா யேறாய்ப் புத்திரத் தான நண்ண
வொள்ளிய தலைவன் பெண்பா லுற்றிடு மிராசி யம்சங்
கொள்ளவேபுவியிற்றோன் றுங் குரிசில்பெண்மிகுதியினும்
வள்ளிதழ்க் கமலப் பூவை மருட்டிய வதனத் தாளே.

(இ - ள்:) கர்க்கடகம், துலாம், இடபம் என்னும் இவ்விராசிகளுள் ஒன்று புத்திரத்தானமாக, புத்திரத்தானாதிபதி ஸ்திரீராசியங்கிசங்களில் வீற்றிருக்க அக்காலத்துப் பிறந்தவன் புத்திரிகளை மிகுதியாகப் பெறும் பேறுடையனாவன். எ - று.

ஒள்ளிய தலைவன் என்றதனால் பாபக்கிரகசம்பந்தம் பெறாதவனென்று கொள்க. (உக)

## அதிக புத்திரர்கள்.

27. ஆதவன் வியாழன் செவ்வா யைந்தி னுக் குடைய ராகிப்
பேதமில் புருட ராசி யங்கிசம் பெற்றா ரென்றாற்
காதினை யளந்து காமக் கலைக்கரை கடந்த கண்ணா
யோதுமாண் புதல்வர் தன்னை யுவப்புட னுயிர்க்கிற்பாரே.

(இ - ள்:) சூரியன் குரு அங்காரகன் என்னுமிவர்களுள் ஒருவர் புத்திரத்தானாதிபராய்ப் புருடராசியங்கிசங்களி னிற்பராயின் அக்காலத்துப் பிறந்தவனுக்குப் புத்திரர்கள் மிகுதியாகப் பிறப்பார்கள். எ - று.

“பேதமில் புருடராசியங்கிசம்” என்று விதந்தமையாற் பகைநீசமொழித்துக் கொள்க. (உஉ)

28. வெய்யரைந் தான தானம் விழித்திடல் விடவைந் தாதி
துய்யவத் துச்ச மேவச் சுபர்புரு டாங்கி சத்தே
யெய்திநின் றிவனை நோக்க வித்தலை யுதித்து ளோர்க்கு
மையணி விழியி னாளே மைந்தர்கண் மிகுதி யாமே.

(இ - ள்:) புத்திரத்தானம் பாபக்கிரக நோக்கம் பெரு தொழிய, புத்திரத்தானுதிபதி அதியுச்சம் பெற்றிருக்க, புருட ராசியங்கிசம் பெற்ற சுபக்கிரகங்கள் அப் புத்திரத்தானுதிபதியைப் பார்க்க அக்காலத்துப் பிறந்தவனுக்குப் புத்திரர்கள் மிகுதியாகப் பிறப்பார்கள். எ - று.

அதியுச்ச பாகைகளாவன: சூரியனுக்கு மேடத்திற் பத்தாம் பாகையும், சந்திரனுக்கு இடபத்தில் மூன்றும் பாகையும், புதனுக்குக் கன்னியிற் பதினைந்தாம் பாகையும், குருவுக்குக் கர்க்கடகத்தில் ஐந்தாம் பாகையும், சுக்கிரனுக்கு மீனத்தில் இருபத்தேழாம் பாகையும், சனிக்குத் துலாத்தில் இருபதாம் பாகையும் அதியுச்ச பாகைகளாம். (உ௩)

29. எட்டிலா றினிலி ராறி லைந்தினுக் கிறைவ னெய்த
மட்டிலா வலிமை சார்ந்து நல்லவர் நோக்கம் வைத்தான்
முட்டிலாவாழ்க்கைமைந்தருண்டெனமொழிவர்கண்டாய்
பட்டினுற் புனைந்த சோதிப் பையர வல்கு லாளே.

(இ - ள்:) புத்திரத்தானுதிபதி ஆறு எட்டு பன்னிரண்டு ஆகிய தானங்களுள் ஒன்றிலிருப்ப, அப் புத்திரத்தானுதிபனைச் சுபக்கிரகங்கள் அதிக பெலமடைந்திருந்து பார்ப்பின் அக்காலத்துப் பிறந்தவனுக்குத் தீர்க்காயுளுஞ் சரீரபெலமுமுள்ள புத்திரர்கள் பிறப்பார்கள். எ - று. (உ௪)

## புத்திரநாசம்.

30. ஆடல்சே ரிராகு வைந்தி லணுகவவ் வதிப னோடு
கூடிட நல்லோர் பார்வை யிவன்மிசைக் கூடி டாதேற்
பாடகப் பாதப் பாவாய் பன்னகத் தெய்வ முன்னு
னுடியே நவின்ற சாப மொழியினுற் புதல்வர் நாசம்.

(இ - ள்:) இராகு புத்திரத்தானத்திருக்க, அன்றிப் புத்திரத்தானுதிபனோடு கூட, சுபக்கிரகதிருஷ்டி அவ்விராகுவுக்கு இல்லாதொழியின் அக்காலத்துப் பிறந்தவனுக்கு நாகசாபத்தாற் புத்திரநாசமுண்டாம். எ - று. (உரு)



31. ஓரையிற் றிரிகோ ணத்தி லுயர்சனிச் சூரனன் ருயி
லீரமில் குளிகன் சேர வினியவர் பார்வை யின்றேற்
சீர்கெழு பிதிர்தோ டத்தாற் புத்திர நாசஞ் சேருங்
கார்முகில் வெளுப்ப நீண்டு கறுத்திடு மோதி யாளே.

(இ - ள்:) இலக்கினத்திலேனும், ஐந்தாம் ஒன்பதா மிடங்களிலேனும் சனியாயினும் குளிகனுயினும் பெலமுற்றிருப்பச் சுபக்கிரகநோக்கம் அவர்க்கில்லாதிருப்பின் அக்காலத்துப் பிறந்தோனுக்குப் பிதிர்சாபத்தாற் புத்திரநாசமுண்டாம். எ - று. ()

32. வீறிடச் செவ்வா யைந்தின் மேவிட வதுவின் ருயி
னுறுடை யானைக் கூடி யைந்திடை யணுக நல்லோர்
பேறுடைப் பார்வை திரப் பிறந்தவன் றனக்குப் பாவாய்
மாறுடைப் பகைவர் செய்த வஞ்சத்தான் மைந்தர் நாசம்.

(இ - ள்:) அங்காரகன் புத்திரத்தானத்திருக்க, அல்லது அவன் சத்துருத்தானுதிபதியுடன் கூடி ஐந்திலிருக்க, அவ்விருவருக்கும் சுபக்கிரகநோக்கம் இல்லாதொழியின் அக்காலத்துப் பிறந்தோனுக்குச் சத்துருக்கள் செய்த பில்லி சூனிய முதலிய க்ஷுத்திரப் பிரயோகங்களாற் புத்திரநாசமுண்டாம். எ - று. (உஎ)

வேறு.

33. ஐந்துக்குடை யானைந்தினி லமரச்சுபர் பார்வை
சிந்தித்தில ராய்நின் றிடத் தீயோரவை செய்ய
விந்தப்புவி மிசையேவரு மேந்தற்கிலை புதல்வர்
முந்தச்சுர ராேனரிடு கொடுஞ்சாபத்தின் முடிவால்.

(இ - ள்:) புத்திரத்தானுதிபதி புத்திரத்தானத்திருக்க, சுபக்கிரகங்கள் அப்புத்திரத்தானுதிபதியைப் பாராதொழிய, பாபக்கிரகங்கள் பார்வைசெய்ய அக்காலத்துப் பிறந்தோனுக்குத் தேவர்களிட்ட சாபத்தாற் புத்திரநாசமுண்டாம். எ - று. (உஅ)

34. நாட்டும்மொரு நாலிற்கொடி யோர்கண்ணிட வைந்தாம்
வீட்டுக்குடை யோன்மந்தனு டன்கூடிவி ளங்கக்
காட்டும்மிரண் டாறிற்கொடி யோர்வந்துக லந்தா
லீட்டுங்கொடும் பவந்தாய்புரிந் திடலான்மக விலையே.

(இ - ள்:) மாதிருத்தானமாகிய நான்காமிடத்திற் பாபக்கிரகங்களிருக்க, புத்திரத்தானுதிபதி சனியோடு கூடி விளங்க, இரண்டாம் ஆறுமிடங்களிற் பாபக்கிரகங்கள் இருப்பின் அக்காலத்துப் பிறந்தவனுக்கு அவன்றாய் செய்த பாவத்தாற் புத்திரநாசமுண்டாம். எ - று. (உகூ)

35. ஒன்பானிடந் தீயோர்புக வைந்தாமிட முடையோன்
வன்பாகிய சனியோடுற வாய்க்குந்திரி கோணத்
தின்பாகிய குளிகன்பிறந் திருக்கப்பிறந் தோற்கு
முன்பாம்பிதிர் பவத்தாற்சுத ரின்றும்பனி மொழியே.

(இ - ள்:) பிதிர்த்தானத்திற் பாபக்கிரகங்களிருக்க, புத்திரத்தானுதிபதி சனியோடு கூட, குளிகன் திரிகோண இராசிகளுள் ஒன்றிலிருக்க அக்காலத்துப் பிறந்தோனுக்கு அவன் பிதா செய்த பாவத்தாற் புத்திரநாசமுண்டாம். எ - று.

திரிகோண இராசிகளாவன: இலக்கினமும், அதற்கு ஐந்தாம் இராசியும், அதற்கு ஐந்தாம் இராசியாகிய ஒன்பதாம் இராசியுமாம். (௩0)

ஐந்தாம்பாவம் முற்றிற்று.

---

# முதலாம் பாவம்.

## தீராப்பிணி, மரணம்.

36. எழுமோரையி னதிபன்கொடி யோர்மத்திமத் திருப்ப
நழுவாதிலக் கினத்தேகொடுங் கோளானவை நண்ண
வழுவாக்கலைப் புலவோன்மிக வலிகுன்றிடப் பிறந்தோன்
முழுநோயினி லழுந்தாவுயிர் முடிவானிது திடனே.

(இ - ள்:) இலக்கினுதிபதி பாபக்கிரகங்கட்கிடையே இருக்க, இலக்கினத்திற் பாபக்கிரகங்கள் வீற்றிருக்க, சந்திரன் மிகப் பெலகீனமடைந்திருக்க அக்காலத்துப் பிறந்தவன் தன்னுயுண் முழுதும் நோயிலேயே அழுந்திக்கிடந்துயிர் துறப்பன்; இதுநிச்சயம். எ - று.

இப்பாவத்தாற் பெறப்படுவன: கீர்த்தி, மூர்த்தி, சீவன், அங்கம், கல்வி, சிரசு, பாக்கியம், புசிப்பு, ஆயுள், பிணி, மரணம், தனம் முதலியனவாம். (க)

37. ஏரார்தரு மெட்டாதிப னீசம்பகை யெய்தச்
சீரார்தர வருமோரையிற் றீயோர்புக நல்லோர்
பாராவிடிற் படிக்கேவரு பாலன்பல நோயால்
வாரார்முலை யாளேயுயி ரிழப்பானெனல் வழக்கே.

(இ - ள்:) ஆயுட்டானுதிபதி பகைநீசவிராசிகளிற் றன் வலியிழந்திருக்க, இலக்கினத்திற் பாபக்கிரகங்கள் புகுந்திருக்க, சுபக்கிரகங்கள் அவர்களைப் பாராதொழியின் அக்காலத்துச் சனனமானவன் தீராத பற்பல நோய்களால் வருந்தி உயிர்மாய்வன். எ - று.

ஆயுட்டானுதிபதி சுபக்கிரகநோக்கம் பெறாது பகைநீசவிராசிகளிற் பெலங்குன்றியிருத்தல் ஆயுட்சுருக்கத்தையும், சுபக்கிரக நோக்கமின்றி இலக்கினத்திற் பாபக்கிரகங்களிருத்தல் தீராப்பிணியையுங் குறிப்பித்தல் காண்க. ஒருவனுக்குரிய பற்பல போகங்களும் இலக்கினத்தாற் குறித்துணரப்படுதலிற் "சீரார்தரவருமோரை" என்று விசேடித்தார். (உ)

**38.** ஒருபன்னிரண் டெட்டாறினிற் றாராபதி யோங்கத்
தருமோரையி னதிபன்றனைச் சனிபாலகன் கூட
வருமோரையி னல்லோர்விழி வைப்பற்றிடப் பிறந்தோன்
பெருநோய்கொடு நமனுருறை பெருந்திக்கினிற் புகுமே.

(இ - ள்:) ஆறு எட்டு பன்னிரண்டு ஆகிய தானங்களிற் சந்திரனிருக்க, இலக்கினாதிபதியோடு குளிகன் கூடியிருக்க, இலக்கினத்துக்குச் சுபக்கிரகநோக்க மில்லாதிருக்க அக்காலத்துப் பிறந்தவன் பெருவியாதியினால் வருந்தி உயிர்துறப்பன். எ - று.

தேகசுககாரகனாகிய சந்திரன் பிணி மரண துக்கத் தானங்களிற் புகுந்திருத்தலும், சீவக்கோளாகிய இக்கினாதிபதியோடு குளிகன் கூடுதலும், சீவத்தானத்துக்குச் சுபக்கிரகநோக்கமில்லாமையும் பெருநோய்சொள்ளுதலையும், அதனால் ஆயுள் குறைவடைந்து உயிர் நீங்குதலையுங் குறிப்பித்தல் காண்க. (௩)

**39.** பிறையுங்குளி கனுங்கூடியெட் டாறந்தம் பிறங்க
நிறையும்மிலக் கினத்தேகொடி யோர்நின் றிடப்பிறந்தோ
னறையும்பிணிப் பிணியான்மிக வழுங்கிப்பக ரேரு
மிறைவன்பதி புகுவான்மயி லிணையாமிய யிலாளே.

(இ - ள்:) சந்திரனுங் குளிகனுங் கூடி ஆறு எட்டு பன்னிரண்டு ஆகிய தானங்களுள் ஒன்றிலிருக்க, இலக்கினத்திற் பாபக்கிரகங்கள் இருக்க அக்காலத்துப் பிறந்தவன் பெருவியாதியான் மிகவும் வருந்தி இறப்பன். எ - று. (௪)

**40.** உதயத்திறை தீயோருட னுறவோரையிற் குளிகன்
வதியத்திகழ் மதியத்தொடு கொடியோர்களு மருவித்
ததையெட்டினி லாறிற்பனி ரண்டிற்றயங் கிடுமேல்
விதுவொத்திடு நுதலாயுயிர் வீவானெடு நோயால்.

(இ - ள்:) இலக்கினாதிபதி பாபக்கிரகங்களோடு கூடியிருக்க, இலக்கினத்திற் குளிகன் வீற்றிருக்க, சந்திரன் பாபக்கிரகங்களுடன் கூடி ஆறு எட்டு பன்னிரண்டு ஆகிய தானங்களுள் ஒன்றிலிருப்பின் அக்காலத்துப் பிறந்தவன் நீண்டநோயினால் வருந்தி உயிர்துறப்பன். எ - று. (௫)

**41.** அறிவார்புதன் குளிகனொரு மனைகூடிட வாறி
னெறியார்பனி ரண்டெட்டினி னிலவானது குலவப்
பிறியாமலொன் பானைந்தினிற் கொடுங்கோளது பிறங்கில்
வெறியார்குழ லாளேகெழு பிணியாலுடல் விழுமே.

(இ - ள்:) புதனுங் குளிகனும் ஒரு இராசியிற் கூடி வீற்றிருக்க, சந்திரன் ஆறு எட்டு பன்னிரண்டு ஆகிய தானங்களுள் ஒன்றிலிருக்க, ஐந்து ஒன்பதா மிடங்களிற் பாபக்கிரகங்கள் இருப்பின் அக்காலத்துப் பிறந்தவன் கொடிய நோய்களாற் பீடிக்கப்பட்டு மரணமடைவன். எ - று.

ஐந்தாமிடமும் சீவத்தானமாதலாலும், ஒன்பதாமிடஞ் சகலபோகத்தானமாதலாலும் அவற்றிற் "கொடுங்கோளானவைபிறங்கலு"ம் கொடுநோயால் உடல்விடற்குக் காரணமாதல் காண்க. (௬)

**42.** தயங்கும்முப யத்தேபொலி சரராசியங் கிசத்தே
நயங்கொண்டிடு மதிமந்தனு மோரேசனு நண்ண
வயங்குந்திரி கோணத்திடை கொடியோர்கள் வதிந்தா
லியங்கும்பிணி யினிற்பாலக னிறப்பானென விசைப்பார்.

(இ - ள்:) சந்திரனுஞ் சனியும் இலக்கினாதிபதியும் உபயவிராசியிற் சராங்கிசத்திலிருக்க, பாபக்கிரகங்கள் ஒன்று ஐந்து ஒன்பதாமிடங்களாகிய திரிகோணவிராசிகளிலிருப்பின் அக்காலத்துப் பிறந்தவன் நீடித்த நோயால் வருந்தி யிறப்பன். எ - று.

## பிணிசாந்தம்.

வேறு.

**43.** காவுறு தீயவ ரோரை கைக்கொளப்
பரவுமெட் டாறுபன் னிரண்டிற் பான்மதி
விரவிட நல்லரோ ரேசன் மேல்விழி
தாவரி னோய்கொடு பிழைத்தல் சாருமே.

(இ - ள்:) இலக்கினத்திற் பாபக்கிரகங்களிருக்க, சந்திரன் ஆறு எட்டு பன்னிரண்டு ஆகிய தானங்களிலிருக்க, இலக்கினாதிபதியைச் சுபக்கிரகங்கள் பார்க்க அக்காலத்துப் பிறந்தவன் பிணிகொண்டு வருந்தி, அது சாந்தமாக நன்கு சீவிப்பன். எ - று.

பாபக்கிரகங்கள் இலக்கினத்திருத்தலும் சந்திரன் துர்த்தானத்திருத்தலும் பிணிகொள்ளுதற்கும், இலக்கினாதிபதி சுபர் நோக்கம் பெறுதல் அப்பிணி சாந்தமாய் நன்கு சீவித்தற்கும் காரணமாதல் காண்க. (அ)

**44.** உடலுயிர்க் கிறைவரி லொருவர் பாபியர்
நடுவுற வோரையை நல்லர் நோக்குறத்
தொடுகடற் புவிபிடைத் தோன்று மைந்தருக்
கிடுகிடை. யாய்பிணி யெய்தித் தீருமே.

(இ - ள்:) சந்திரலக்கினாதிபதியாவது உதயலக்கினாதிபதியாவது பாபக்கிரகங்களுக்கிடையே வீற்றிருக்க, இலக்கினத்தைச் சுபக்கிரகங்கள் பார்க்க அக்காலத்துப் பிறந்தவனைப் பிணி சார்ந்து வருத்திப் பின்பு சாந்தியாகும். எ - று.

உடல்—சந்திரலக்கினம். உயிர்—உதயலக்கினம். இருவரில் ஒருவர் பாபியர்நடுவுறல் பிணிகொள்ளுதற்கும், ஓரையை நல்லர் நோக்குதல் அது சாந்தமாதற்குங் காரணமாதல் காண்க. (கூ)

**45.** ஓரைம னாட்சிநட் புச்ச முற்றிய
லார்தரு மோரையை நோக்கி லாட்சிநட்
பேர்பெறு முச்சமென் றிசைக்கு மங்கிசஞ்
சார்தரி னோயிலா வாயுள் சாருமே.

(இ - ள்:) இலக்கினாதிபதி நட்பாட்சியுச்சம் பெற்று இலக்கினத்தை நோக்கினாலும், அன்றி நட்பாட்சியுச்ச அங்கிசம் பெற்றிருப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் ஆயுள் முழுதும் நோயின்றி வாழுவன். எ - று. (க0)

## பித்தரோகம்.

**46.** குறைவிலோ ரேசன்செங் கதிரைக் கூடினு
மறையுமெட் டினிற்கதி ரனுக வோரையிற்
றுறையுறு நல்லர்நோக் கின்றித் தோன்றிடிற்
பிறைநுத லாயவன் பித்த ரோகியே.



(இ - ள்:) இலக்கினாதிபதி சூரியனோடு கூடினாலும், அட்டமத்திற் சூரியனிருக்க இலக்கினத்துக்குச் சுபர்பார்வை இல்லாதொழியினும் அக்காலத்துப் பிறந்தவன் பித்தரோகியாவன். எ - று.

சீவத்தானாதிபதி பித்தக்கிரகமாகிய சூரியனோடு சகிதமாதலும், அச் சூரியன் மிருத்துத்தானத்திருக்கச் சீவத்தானத்துக்குச் சுபக்கிரகதிருஷ்டி இல்லாதொழிதலும் பித்தரோகியாதற் கேதுவாதல் காண்க. (கக)

## கயரோகம்.

**47.** நிறுவிய வோரைதா னீரி ராசியாய்க்
கறையுடைக் குறைமதி கடின ரோடுவந்
துறைதர வாறினிற் கொடிய ருற்றிடிற்
றெறுகய ரோகந்தான் சேரு மென்பவே.

(இ - ள்) சலவிராசி உதயமாக, அதில் அபரபக்கச் சந்திரன் பாபக்கிரகங்களோடு கூடியிருக்க, ஆறுமிடத்திற் பாபக்கிரகங்களிருப்பின் அக்காலத்துப் பிறந்தவன் கயரோகியாவன். எ - று.

வாத பித்த சிலேஷ்மங்கள் முறையே வாயுத்தேயுவப்புக்களை ஆதாரபூதமாக உடையனவாதலாற் சலராசி உதயமாக அதிற் சலக்கிரகமுந் தேககாரகனுமாகிய சந்திரன் பெலகீனனாய்ப் பாபரோடிருத்தலும், ரோகத்தானத்திற் றீயவர் இருத்தலும் சிலேஷ்மரோகமாகிய கயரோகத்தாற் பீடிக்கப்படுதற் கேதுவாதல் காண்க. (கஉ)

**48.** உதித்திடு மோரைநல் லோர்க ணோக்கறத்
துதித்திடு பொன்னுட னசுபர் தோய்ந்துதான்
மதித்திடு மாறெட்டு மருவிச் சேர்ந்திடிற்
கதித்திடுங் கொடுங்கய ரோக மென்பரே.

(இ . ள்:) உதயலக்கினத்துக்குச் சுபக்கிரகநோக்கம் இல்லாதொழிய, பாபக்கிரகங்கள் குருவோடு கூடி ஆறெட்டாமிடங்களிலிருப்பின் அக்காலத்துப் பிறந்தவன் கயரோகியாவன். எ - று.

## நெருப்புச்சுரம்.

49. கிலமக னோரையை நெடிது பார்த்திடப்
புலவனைத் தீயவர் பொருந்தி யெட்டினி
னிலகிடு மிரண்டினி னிருப்ப வெய்தினோ
னுலகினிற் கனற்சுர ரோகஞ் சேர்வனே.

(இ - ள்:) செவ்வாய் இலக்கினத்தைப் பார்க்க, பாபக்கிரகங்கள் புதனோடுகூடி எட்டாமிடத்திலேனும் இரண்டாமிடத்திலேனும் இருக்க அக்காலத்துப் பிறந்தவன் நெருப்புச்சுரத்தாற் பீடிக்கப்படுவன். எ - று.

கனற்கிரகமாகிய அங்காரகன் ரோகத்தானத்திலிருந்து சீவத்தானத்தைப் பர்ர்த்தலும், புதனோடு பாபக்கிரகங்கள் கூடி மிருத்துத்தானத்திலேனும் மாரகத்தானமாகிய இரண்டாமிடத்திலேனும் இருத்தலும் நெருப்புச்சுரத்தாற் பீடிக்கப்படுதலைக் குறிப்பித்தல் காண்க. (கச)

## பிரமேகரோகம்.

50. உசனனெட் டிரண்டினி லோங்க வோரைதா
னசைவிதீ யோர்மனை யாக வாதிபன்
பகையினீ சம்பகை யாக வோரைநீ
யிசையுநோக் குறிற்பிர மேக மெய்துமே.

(இ - ள்:) சுக்கிரன் எட்டாமிடத்திலேனும் இரண்டாமிடத்திலேனும் வீற்றிருக்க, இலக்கினம் பாபக்கிரகவீடாய்ப் பாபக்கிரகநோக்கம் பெற, இலக்கினாதிபதி பகைநீசவிராசியி லிருப்ப அக்காலத்துப் பிறந்தவன் பிரமேகரோகியாவன். எ - று. (கரு)

## வசூரி.

51. அரவுத யத்துற வார னோக்குற
விரவுமெட் டாதிப னேழின் மேவிட
வுரவுநீர்க் கருங்கட லுலகிற் றோன்றினோன்
மருமலர்க் கூந்தலாய் வசூரி கொள்வனே.

(இ - ள்:) இராகு இலக்கினத்திலிருக்க, அங்காரகன் அவ்விராகுவைப் பார்க்க, அட்டமத்தானாதிபதி ஏழாமிடத்திருக்க அக்காலத்துப் பிறந்தவனுக்கு வசூரிநோயுண்டாம். எ - று. (கசு)



வேறு

52. பண்புடை யோரையில் வெய்யரு றச்சுபர்
பார்வைசெ யாததிப
னெண்பயி லாறினி லெட்டினி ராகுவொ
டெய்தியி ருந்திடினும்
விண்பயில் பங்குவு டன்பவு மன்றிரி
கோணம்வி ளங்கிடினும்
வண்புவி மீதுபி றந்தவ னைந்துவ
சூரியின் மாளுவனே.

(இ - ள்:) பாபக்கிரகங்கள் இலக்கினத்திருக்க, இலக்கினாதிபதி சுபக்கிரகநோக்கம் பெறாது இராகுவோடு கூடி ஆறு எட்டாமிடங்களிலிருப்பினும், செவ்வாய் சனியோடு கூடித் திரிகோண இராசிகளில் இருப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் வசூரியால் இறப்பன். எ - று.

எல்லாக் கிரகங்கட்கும் மேலாயிருத்தலாற் சனியை விண்பயில் பங்கு என்றார். (கஎ)

53. சத்துரு நீசமி லக்கின மன்னுற
வாறிரு நாலுதனிற்
புத்தியி றீயரு றக்கலி யம்பவு
மன்விழி பொலிவுறினும்
பத்தியில் பாபரு டன்பிறை கண்டமு
றக்குச பார்வையுயிர்க்
குய்த்திடி னுங்கொடி தானவ சூரியி
னுள்ளுயிர் மாளுவனே.

(இ - ள்:) இலக்கினாதிபதி பகைநீச விராசியிலிருக்க, பாபக்கிரகங்கள் ஆறு எட்டாமிடங்களி லிருக்க, இலக்கினம் அங்காரகனுடைய நோக்கம்பெறினும்; சந்திரன் பாபக்கிரகங்களோடு கூடிக் கேந்திரம் பெற்றிருக்க, அங்காரகன் இலக்கினத்தைப் பார்ப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் வசூரியால் இறப்பன். எ - று.

கல்லியம் என்பது இலக்கினம். அது கலியம் என இடைக்குறையாயிற்று. (கஅ)

54. சேயுமி லக்கின நாதனு மோர்மனை
செவ்விதி னெய்தியிருக்
தேயுமி லக்கின மேல்விழி வைக்கவி
ராகுவு மம்புலியும்
போயொ ரிடத்துற நல்லவர் பார்வைபொ
ருந்துத லித்தவிரின்
மாயுமு தித்தசி ருர்தணி யாதவ
சூரிய னும்பிணியால்.

(இ - ள்:) அங்காரகனும் இலக்கினாதிபதியுங் கூடி ஒரு இரா சியிற் பெலமாக வீற்றிருந்து இலக்கினத்தைப் பார்க்க, இராகுவுஞ் சந்திரனுங் கூடியிருக்க, சுபக்கிரகநோக்கம் அவர்களுக்கில்லாதொழி யின் அக்காலத்துப் பிறந்தவன் வசூரியால் இறப்பன். எ - று. (கக)

55. சிறப்புறு மோரையி னுரியவ னாகிய
செவ்வாய் பாபருட
னுறப்புக வாறுடை யான்பகை நீசம
துற்றவ ரோடுபுகி
லிறப்புறின் மாமதி யந்தனி லோரையி
னல்லவ ருகணறப்
பெறப்படு மைந்தன்வ சூரியி னொந்துபி
றப்பொழி வான்மயிலே.

(இ - ள்:) செவ்வாய் இலக்கினாதிபதியாய்ப் பாபக்கிரகங்க ளோடு கூடிருக்க, ஆறாதிபன் பகைநீசக் கிரகங்களோடு கூடினும் மூடமாயினும், சந்திரனும் இலக்கினமும் சுபக்கிரகநோக்கம் பெறா தொழிய அக்காலத்துப் பிறந்தவன் வசூரியால் இறப்பன். எ - று. ()

## விரணரோகம்

56. பாவிய ரானவ ரோரையி லேயிரு
பார்வைசெ யப்பவுமன்
மேவியு ரைக்குமி ரட்டைகொ ளுலின்வி
யப்பின்வி ளங்கியிடத்
தாவியொ ரெட்டினி ரண்டினி லேசிகி
சார்வுற நின்றிடுகி
லோவிய மொத்தமி னேவிர ணப்பிணி
யுற்றிடு நித்தியமே.



(இ - ள்:) இலக்கினத்தைப் பாபக்கிரகங்கள் பார்க்க, அங்கா ரகன் அட்டமத்தானத்தில் பலவானாய் வீற்றிருக்க, இரண்டு எட்டாமிடங்களிற் கேது விருக்க அக்காலத்துப் பிறந்தவன் விரண ரோகத்தால் நிதமும் வருந்துவன். எ - று. (உக)

## வாதரோகம்

57. சனியுத யத்துற வாறிரு நாலிடை
சந்திரன் வந்துபுகத்
துனிபெறு மிக்கசெவ் வாய்விழி நோக்குந
லோரைத னைத்தொடரப்
பனிதரு மைக்கடல் சூழுல கத்திடை
பாலரு தித்திடுகி
லினியம டக்கொடி வாதமெ னும்பிணி
யெய்துதல் சத்தியமே.

(இ - ள்:) சனி இலக்கினத்திலிருக்க, சந்திரன் ஆறு எட்டா மிடங்களிலிருக்க, செவ்வாய் இலக்கினத்தைப் பார்ப்பின் அக்காலத் துப் பிறந்தவன் வாதரோகியாவன். எ - று. (உஉ)

58. காரியி லக்கின வாதிப னாயுயி
ரைந்துக லந்துறையச்
சீரிய ரைத்தவிர் தீயரி லக்கின
மீதுவி ழித்தல்செய
வேரிய னற்கலை சார்மதி யத்துட
னீனர டுத்திடவே
பாரிலு தித்தவன் வாதமெ னும்பிணி
யாலுயிர் பாறுவனே.

(இ - ள்:) சனி இலக்கினாதிபதியாய் அவ்விலக்கினத்திலே னும் ஐந்தாமிடத்திலேனும் இருக்க, சுபக்கிரகசம்பந்தம் பெறாத பாபக்கிரகங்கள் இலக்கினத்தைப் பார்க்க, சந்திரனோடு பாபக் கிரகங்கள் கூட அக்காலத்துப் பிறந்தவன் வாதரோகத்தால் இறப் பன். எ - று.

"சீரியரைத் தவிர் தீய ரிலக்கினமீது விழித்தல்செய" என் பதற்குச் சுபக்கிரகங்கள் பாராதொழிய, பாபக்கிரகங்கள் பார்க்க என்று பொருள்கோடலும் ஒன்று. (உங)

59. காரர வம்வரு மோரைபு குந்திட நல்லவர் கண்செயலற்
றீரம றும்பல தீயவர் கண்செய வெட்டினி லாறுதனிற்
கோரமு றுஞ்சனி யெய்திட வந்தகு மாரரெ லாமடைவா
யாரமு தந்தனை யுண்கினும் வாதம டுத்துயிர் மாளுவரே.

(இ - ள்:) இராகு இலக்கினத்திலிருக்க, அவ்விராகுவைச் சுபக்கிரகங்கள் பாராது பல பாபக்கிரகங்கள் பார்க்க, ஆறு எட்டாமிடங்களிற் சனியிருக்க, அக்காலத்துப் பிறந்தவன் இடைவிடாது அமிர்தமுண்டாலும் வாதரோகத்தால் உயிர் துறப்பது நிச்சயம். எ - று. (உச)

## குட்டரோகம்

60. எறியல் வில்லெழு மோரைய தாகவி
    ராகுவி ருந்திடவே
யாறில்வி யாழன மர்ந்திட வந்தகன்
    கேந்திர மணுகியிட
மாறில்பு விக்கிடை தோன்றிய மைந்தன்வ
    யங்கெழு குட்டமுடன்
றேறுத ரித்திர மற்றுள நோய்மல
    டாகுவன் றேமொழியே.

(இ - ள்:) தனு உதயலக்கினமாக, அதில் இராகு வீற்றிருக்க, ஆறாமிடத்திற் குருவிருக்க, சனி கேந்திரத்தானத்திற் பெலமுற்றிருக்க அக்காலத்துப் பிறந்தவன் குட்டரோகமும், அதுபோலும் பிறரோகங்களும், தாரித்திரியமும், மலடாந்தன்மையு மடைந்து வருந்தியிறப்பன். எ - று. (உரு)

## சலரோகம், வாதரோகம்.

61. நாலிடை நீலனு மாறிடைப் பாபரு
    நண்ணநி லக்குமா
னேல்வைபி ரேரையை நோக்கினு மிந்துவி
    ராகுவொ டெய்திடச்
சால்தரு நல்லவர் நோக்கற வும்புவி
    தன்னினு தித்திடுவோன்
மாலுத வுஞ்சல ரோகமும் வாதமும்
    வந்துயிர் மாளுவனே.



(இ - ள்:) நாலாமிடத்திற் சனியும், ஆறாமிடத்திற் பாபக்கிரகங்களும் இருக்க, செவ்வாய் இலக்கினத்தைப் பார்க்கினும்; சந்திரன் இராகுவோடு கூடியிருக்க, அவர்களைச் சுபக்கிரகங்கள் பாராதொழியினும் அக்காலத்துப் பிறந்தவன் சலரோகமாதல் வாதரோகமாதல் வந்து மரிப்பான். எ - று. (உசு)

## குய்யரோகம்

வேறு

62. இலகு சந்திர னெட்டினி லாறினிற்
    றீய ரோடடுத் தெய்தக்
குலவு மட்டமா திபன்றனை யிராகுவுங்
    கொடிய கேதுவும் பார்க்க
வுலகி லுற்பவஞ் செய்திடு மாந்தர்தான்
    குய்ய ரோகமுற் றேய்வார்
கலக வாள்விழித் துடியிடைப் பிடிநடைக்
    காதன் மென்மொழி யாளே.

(இ - ள்:) சந்திரன் ஆறு எட்டாமிடங்களிற் பாபக்கிரகங்களோடு கூடியிருக்க, அட்டமாதிபதியை இராகுகேதுக்கள் பார்க்க அக்காலத்துப் பிறந்தவன் குய்யரோகத்தால் வருந்தி யிறப்பன். எ - று. (உஎ)

## குன்மரோகம்

63. வன்மங் கூர்சனி யோரையி னெய்திடக்
    குறைந்த சந்திரன் வந்து
கன்மக் தியரைக் கூடவா றெட்டினிற்
    கொடிய வர்கலந் தோங்கச்
சென்மந் தானிவண் டோன்றிய பாலகன்
    செழும ருந்தினிற் றீராக்
குன்மந் தானுற வாடுவன் வாடிய
    கொடியெ னுமிடை யாளே.

(இ - ள்:) இலக்கினத்திற் சனியிருக்க, அபரபக்கச் சந்திரன் பாபக்கிரகங்களோடு கூட, ஆறு எட்டாமிடங்களிற் பாபக்கிரகங்கள் இருக்க அக்காலத்துப் பிறந்தவன் குன்மரோகத்தாற் பீடிக்கப்பட்டு உயிர்துறப்பன். எ - று. (உஅ)

## குட்டரோகம்

64. இணங்கு மோரைக்கோ னிராகுவைக் கூடிட
வல்ல தேழினி லெய்த
வணங்கு சேர்சனி யெட்டுறி னும்மதி
யவனைச் சுன்னனோங் தாவு
முணங்கு சேயவங் கூடித்தேள் சுருக்குளிர்
கயலின் கூறதுற் றுளுஞ்
சுணங்கு பூத்தொளிர் முலையினாய் குட்டநோய்
தொடரு மென்றிது சொல்லே.

(இ - ள்:) இலக்கினாதிபதி இராகுவோடு கூட அன்றி ஏழா மிடத்திருக்க, சனி எட்டாமிடத்திருப்பினும் அன்றிச் சந்திரன் சனியுடன் கூடியிருப்பினும்; அங்காரகன் சந்திரனோடு கூடிக் கர்க் கடகம், விருச்சிகம், மகரம், மீனம் என்னும் இந்நான்கு அங்கிசங் களுள் ஒன்று பெற்றிருப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் குட்ட ரோகத்தாற் பீடிக்கப்பட்டிறப்பன். எ - று. (௨௯)

## வெகுரோகம்

65. வேலை யாகிய வோரையி னதிபதி
வலிமை குன்றிட மிக்க
நாலை யோர்கரும் பாம்பிடம் பிடித்திடத்
தீயர் பார்வையி னண்ணில்
வாலை யாம்வய தினிற்பல நோயினன்
மயங்கு வான்மணஞ் சேர்ந்த
சோலை யாமெனப் பூக்களு மாக்களுஞ்
சூழ்ந்தி டுங்குழ லாளே.

(இ - ள்:) இலக்கினாதிபதி சத்துருநீசமூடமாய்ப் பெலவீன னாயிருக்க, நாலாமிடத்தில் இராகு வீற்றிருக்க, இலக்கினத்தைப் பாபக்கிரகங்கள் நோக்க அக்காலத்துப் பிறந்தவன் பாலியத்திலேயே பல நோய்களால் வருந்தியிறப்பன். எ - று. (௫0)

66. தடங்கொள் சந்திர னெட்டினி லாறினிற்
றயங்க வாறெனச் சாற்று
மிடங்கொள் கொற்றவன் கேந்திரம் பெற்றிட
விலங்கு லக்கினந் தன்னின்



முடங்கொ ணீலனு மிருந்திடத் தோன்றினோன்
முழுப்பி ணியுடை யோனும்
வடங்கொள் பூண்முலைக் குடங்களாற் றினந்தினம்
வாடு நுண்ணிடை யாளே.

(இ - ள்:) சனி இலக்கினத்திலிருக்க, சந்திரன் ஆறு எட்டா மிடங்களுள் ஒன்றிலிருக்க, ஆறாமிடத்ததிபதி கேந்திரதிரிகோணம் பெற்றிருக்க அக்காலத்துப் பிறந்தவன் வெகுரோகங்களாற் பீடிக் கப்பட்டு உயிர் துறப்பன். எ - று. (௫௧)

## பில்லி, சூனியம்.

67. கூறி லக்கினம் பாபியர் பார்த்திட
வெட்டு ளான்வலி குன்ற
வீறி லட்டமஞ் சனிச்சுரன் பார்க்கினும்
பத்தி னுக்கிறை யேகி
மாறில் பன்னிரண் டுறக்குச னோரையை
விழிக்க வாறினின் மன்னன்
வீறி லக்கின மருவினும் பிறர்புரி
வினைய தான்மெலி வானே.

(இ - ள்:) இலக்கினத்தைப் பாபக்கிரகங்கள் பார்க்க, அட்ட மாதிபதி பெலவீனனாக, எட்டாமிடத்தைச் சனி பார்ப்பினும், அன்றி பத்தாமிடத்ததிபதி பன்னிரண்டாமிடத்திலிருக்க, செவ் வாய் இலக்கினத்தைப் பார்க்க, ஆறாமிடத்ததிபதி இலக்கினத்திருப் பினும் அக்காலத்துப் பிறந்தவன் சத்துருக்கள் செய்யும் பில்லி சூனியம் முதலிய வஞ்சனையால் வருந்தி இறப்பன். எ - று. (௫௨)

68. சேயு நீலனு மோரையை நோக்கவா
றுடையன் கேந்திரஞ் சேரு
மாயி னுங்குச னிலக்கினா திபனுட
னணுக வல்லது செவ்வாய்
மேய கேந்திர முற்றிட வாறுளோ
னோரை யில்விரைந் தேற
மேயு மிப்புவி பிறந்தசேய் பிறர்புரி
வஞ்சத் தாலிட ரெய்தும்.

(இ - ள்:) செவ்வாயுஞ் சனியும் இலக்கினத்தைப் பார்க்க, ஆறுமிடத்ததிபதி கேந்திர திரிகோணம் பெற்றிருப்பினும், அன்றி செவ்வாய் இலக்கினாதிபதியோடு கூட அல்லது கேந்திர திரிகோணம் பெற்றிருக்க, ஆறுமிடத்ததிபதி இலக்கினத்திலிருப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் சத்துருக்கள் செய்யும் பில்லி சூனிய முதலிய வஞ்சனையால் வருந்தி இறப்பன். எ - று. (௬௩)

69. கல்லி யஞ்சர மாகவா றதிபதி
யோரை யைக்கலப் பச்சே
யொல்லு மொன்பதி லாயத்திற் புகவல
துபய ராசியி லேழிற்
புல்லி னும்வெகு வஞ்சனை புதும்புக
லோரை நானவங் கேது
மெல்ல வேறிடக் கேந்திரங் குளிகனூர்
மேவில் வஞ்சனை மேவும்.

(இ - ள்:) இலக்கினஞ் சரவிராசியாக, ஆறுமிடத்ததிபதி இலக்கினத்திருப்ப அல்லது நோக்க, செவ்வாய் ஒன்பதாமிடத்திலேனும் பதினொராமிடத்திலேனும் இருப்பினும், அல்லது ஏழாமிடம் உபயவிராசியாக அதிலிருப்பினும், அன்றி இலக்கினத்தில் நாலில் ஒன்பதில் கேதுவிருக்க, குளிகன் கேந்திரம் பெற்றிருப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் சத்துருக்கள் செய்யும் பில்லி சூனிய முதலிய வஞ்சனையால் வருந்தி இறப்பன். எ - று. (௬௪)

## துஷ்டதேவதை, பசாசு இவற்றாற் பிடை.

70. அடிக்கு ணிள்சர மோரையாய்ச் சேயுற
வோரைக் காதிபன் கூட
விடுக்கட் பாபிய ரிருப்பினு மிலக்கினஞ்
சுபரி ருந்திட வேழில்
வடுக்கொ டுஞ்சனி யிருந்திட மதியினைத்
தீயர் பார்ப்பினும் வந்தோன்
மிடுக்கு மேவிய தேவராற் பசாசினால்
வீவ துதிட மாமே.



(இ-ள்:) இலக்கினஞ் சரவிராசியாய் அதில் செவ்வாய் இருக்க, இலக்கினாதிபதியோடு பாபக்கிரகங்கள் கூடினும்; இலக்கினத்திற் சுபக்கிரகங்கள் இருக்க, ஏழாமிடத்திற் சனியிருக்க, சந்திரனைப் பாபக்கிரகங்கள் பார்ப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் துஷ்டதேவதைகளாலேனும் பைசாசங்களாலேனும் நொந்து இறத்தல் நிச்சயம். எ-று.

## பிணி, தரித்திரம், குய்யரோகம்

வேறு

71. பருதி யோரையிற் றுளி ருக்கவே
பாபர் முன்னினும் பின்னி னும்புகக்
கருது மாறினு மெட்டி னுங்கொடுங்
கடிய ரெய்தவே வந்த காதலன்
பெருகு பாலியந் தன்னி லேபிணிப்
பிணியி னான்மிகப் பிடை யெய்தியே
வருத ரித்திரங் குய்ய ரோகமு
மருவி நித்தமும் வாடு வானரோ.

(இ - ள்:) இலக்கினத்திற் சூரியனிருக்க, அச் சூரியனுக்கு முன்னும் பின்னுமாகிய இரண்டுபன்னிரண்டா மிடங்களிற் பாபக்கிரகங்களிருக்க, ஆறுஎட்டா மிடங்களிலும் பாபர்களிருக்க அக்காலத்துப் பிறந்தவன் பாலியத்திலேயே பெருவியாதியினாற் பிடிக்கப்பட்டுத் தாரித்திரியமுங் குய்யரோகமு முற்றுப் பிரதிதினமும் வருந்தி இறப்பன். எ - று. (௬௬)

## நிதி, ஆடை, ஆயுள்

72. உதய நாதனத் துச்ச மாகவே
யோரை மீதினிற் றாயர் மேவிடச்
சிதைவி லாமுழுப் பார்வை செய்யவெண்
டிங்கள் கேந்திரந் தங்க வந்துளோன்
றதைய நாண்மலர்த் தாம மோடகிற்
றுவு தூமமுஞ் சாரு மோதியாய்
நிதியு மாடையு மாயு ளானது
நிறைய வெய்தியே நீடு வாழ்வனே.

(இ - ள்:) இலக்கினாதிபதி உச்சவிராசியில் அதியுச்ச பாகையில் வீற்றிருக்க, சுபக்கிரகங்கள் இலக்கினத்தில் இருக்க அல்லது அதனைப் பெலமாகநோக்க, பூரணசந்திரன் கேந்திரங்களிற் பெலமாயிருக்க அக்காலத்துப் பிறந்தவன் பொன்னும் புடைவையும் ஆயுளும் நிறையப்பெற்றுச் சிரஞ்சீவியாக வாழ்வான். எ - று. (௬௭)

முதலாம்பாவம் முற்றிற்று.

# இரண்டாம் பாவம்

## தனச்சேதம்

73. பன்னி ரண்டினின் மூவி ரண்டினிற்
பகரி ரண்டினுக் குரிய னெய்தினுந்
துன்னி ரண்டினிற் பன்னி ரண்டுளோன்
றெக்கு மேவினுந் தூய வாயமென்
மன்னன் மூவிரண் டாறி ரண்டுடன்
மருவு நாலிரண் டதனில் வைகினு
மின்னல் வந்திடும் பொருள்கள் சேதமா
யென்று மெய்துமே யின்மை யென்பதே.

(இ - ள்:) இரண்டாமிடத்ததிபதி ஆறாமிடத்திலேனும் பன்னிரண்டாமிடத்திலேனும் இருப்பினும், பன்னிரண்டாமிடத்ததிபதி இரண்டாமிடத்திற் புகுந்திருப்பினும், பதினொராமிடத்ததிபதி ஆறு எட்டு பன்னிரண்டா மிடங்களிலிருப்பினும் அக்காலத்துப் பிறந்தவனுக்கு மனக்கிலேசமுண்டாகும்; முன்னுள்ள தனங்கள் சேதமாய் எக்காலத்தும் தாரித்திரியமே அவனைச் சார்ந்து வருத்தும். எ - று.

இப் பாவத்தாற் பெறப்படுவன: தனம், குடும்பம், நேத்திரம், வாக்கு, வித்தை, சாஸ்திரவிசாரம், செல்வம், முகம் முதலியனவாம். (௧)

74. சாற்றி டுந்தனத் தான வாதிபன்
றனது நீள்வலித் தகைமை குன்றவே
போற்று கின்றதோர் பன்னி ரண்டினிற்
புலவ ரேர்தொழுங் குரவன் வைகவே
யூற்ற முற்றதற் கால வோரைமே
னல்லர் பார்வைதா னன்றி டாவிடத்
தோற்ற முற்றுளோற் குரிய நன்பொருட்
டொகுதி யாவையுந் தொலையு மென்பவே.

(இ - ள்:) இரண்டாமிடத்ததிபதி சத்துருநீசமூடமாய்ப் பெலவீனனாக, குரு பன்னிரண்டாமிடத்திலிருக்க, இலக்கினத்



தைச் சுபர் நோக்காதிருக்க அக்காலத்துப் பிறந்தவனுக்குப் பெற்றோர் முதலிய முன்னோராற் கிடைத்த தனம் முழுதும் அழிந்து, தாரித்திரியம் அவனை மிகுதியும் வருத்தும். எ - று. (௨)

## தனச்செல்வன்

75. இரண்டி னதிப னய மெய்தவவ்
விறைவ னரும்வந் திரண்டி னெய்தினு
மரண்ட ரும்பெருங் கேந்தி ரத்திவ
ரனுகி னுந்திரி கோண மாகவே
முரண்ட ராதிரண் டிடைய னெய்திட
மொழியி ரண்டினிற் சுபரி ருப்பினுந்
திரண்டெ மூந்தனச் செல்வி யேயவன்
றிரண்டெ மூந்தனச் செல்வ னவனே.

(இ - ள்:) இரண்டாமிடத்ததிபதி பதினொராமிடத்தில் வீற்றிருக்க பதினொராமிடத்ததிபதி இரண்டாமிடத்திருப்பினும், அன்றி இவர்கள் கேந்திரம் பெற்றிருப்பினும், இரண்டாமிடத்ததிபதி திரிகோணத்தில் பெலமாக விருக்க இரண்டாமிடத்திற் சுபக்கிரகங்களிருப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் மிக்க செல்வனவன். எ - று. (௩)

76. ஆய மானபன் னொன்றி னதிப
னழகு சேர்தரு மிரண்டி னதிப
னேய மேவினுங் காணி மேவினு
நிகழு முச்சமாய் நோ கிற்பினும்
போயி லக்கின கேந்தி ரந்திரி
கோண மெய்தினும் புவியி னெய்தினோன்
றாய நன்னிதித் தலைவ னென்னவே
சொல்ல மாபெருஞ் செல்வ னவனே.

(இ - ள்:) பதினொராமிடத்ததிபதியும் இரண்டாமிடத்ததிபதியும் நட்பு ஆட்சி உச்சமாயிருப்பினும், அன்றி இலக்கினத்திலேனுந் திரிகோணங்களிலேனும் இருப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் குபேரனை நிகர்த்த பெருஞ் செல்வனவன். எ - று. (௪)

### மந்திரி

77. மெச்சி ரண்டினு மொன்ப தின்கனும்
விளங்கு மாதிபர் கேந்தி ரங்களா
யுச்ச முற்றிலக் கினத்தை நோக்கவே
யுலக மீதுவந் துற்ற பாலக
னச்ச மற்றவே லரசர் நண்புகூ
ரரிய மந்திரித் தொழின டத்துவ
னிச்சை யுற்றசெல் வத்து மந்திரிக்
கிவனை யல்லதா ருவமை யென்னவே.

(இ - ள்:) இரண்டாமிடத்ததிபதியும் ஒன்பதாமிடத்ததிபதியும் கேந்திரங்களில் உச்சம் பெற்று இலக்கினத்தைப் பார்க்கப் பிறந்தவன் அரசர்களுக்கு நண்புமிகுந்த மந்திரியாய்ச் செல்வப் பெருக்கத்தால் குபேரனை யொத்தவனாய்ச் சீவிப்பன். எ - று. (௫)

### இராஜசமானன்

78. ஐயி ரண்டினுக் கதிப னாட்சிநட்
பரிய கேந்திரத் துச்ச மாயினு
மெய்யி ரண்டிலக் கினம தாயினு
மேதை பொன்புகர் காண நிற்பினு
மையி ரண்டிலக் னேச னோடிவ
ரனுகி னுந்திரி கோண நண்ணினுங்
கையி ரண்டெடுத் துலகெ லாந்தொழுங்
காவ லர்க்கரு காளி யாவனே.

(இ - ள்:) பத்தாமிடத்ததிபதி கேந்திரங்களில் நட்பு ஆட்சி உச்சம் பெற்று வீற்றிருப்பினும், அன்றி இலக்கினத்திலேனும் இரண்டாமிடத்திலேனும் அங்ஙனமிருப்பினும், அன்றிப் புதகுரு சுக்கிரர்களது பார்வைபெற்று அங்ஙனமிருப்பினும், அன்றிப் புதகுருசுக்கிரர்கள் இலக்கினாதிபதியோடேனும் பத்தாமிடத்ததிபதியோடேனும் கூடினும், அன்றி அம்மூவரும் திரிகோண இராசிகளிற் பெலமுற்று வீற்றிருப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் இராஜசமானனாவன். எ - று. (௬)

இரண்டாம்பாவம் முற்றிற்று.

---

## மூன்றாம் பாவம்

### சகோதரரின்மை

79. மூன்று ளான்பகை நீச மாகவம்
மூன்றிற் றீயவ ரெய்த நோக்குநர்
சான்ற நல்லர்நோக் கில்லை யாயினுந்
தக்க மூன்றினுக் குடைய னாறினிற்
றோன்று பன்னிரண் டெட்டி னெய்திடச்
சுபரொ ழிந்துளோர் பார்க்க மைந்தனை
யின்ற வன்னைதான் பின்னை மைந்தரை
யின்றி டாளிதற் கைய மில்லையே.

(இ - ள்:) மூன்றாமிடத்ததிபதி பகைநீசமாயிருக்க, மூன்றாமிடத்திற் பாபக்கிரகங்கள் இருக்க நோக்கச் சுபர் நோக்காவிடினும், மூன்றாமிடத்ததிபதி ஆறு எட்டு பன்னிரண்டா மிடங்களிலிருக்கப் பாபக்கிரகங்கள் மாத்திரம் அவனைப் பார்ப்பினும் அக்காலத்துப் பிறந்தவனுக்குப் பின்சகோதரர் பிறக்கமாட்டார். எ - று.

இப்பாவத்தாற் பெறப்படுவன: சகோதரம், போகம், கன்னபூஷணம், வீரியம், போசனபாத்திரம் முதலியனவாம். (௧)

### சகோதரவிருத்தி

80. கிளரு முச்சநட் பாட்சி யுற்றுநன்
கேந்தி ரந்திரி கோண மெய்தியே
தளர்வி லாதநல் லவர்கள் பார்த்திடச்
சாரு மூன்றினிற் றலைவ னெய்தவே
வளரு மிப்புவிக் கிடையு தித்துளோன்
வருச கோதர மிகுதி சேர்வனு
லொளிப மூத்தபொற் குழையி ரண்டினு
மோடி யோடிகின் றுலவு கண்ணியே.

(இ - ள்:) மூன்றாமிடத்ததிபதி கேந்திர திரிகோணங்களில் நட்பு ஆட்சி உச்சமாயிருக்க, அவனைப் பெலமேறிய சுபக்கிரகங்கள் நோக்க அக்காலத்துப் பிறந்தவன் சகோதரவிருத்தியை உடையவனாவன். எ - று. (௨)

## சகோதரநாசம்

81. கொடியர் மூன்றினிற் குடியி ருந்திடக்
கோதி லாதவத் தான வாதிப
னெடிய கேந்திரத் தெய்தி னுந்திரி
கோண மென்னுமந் நிலையி னிற்பினு
நொடியி னல்லர்தம் பார்வை யில்லையே
னுவல்ச கோதரம் புவியு தித்தபின்
மடியு மிக்கசந் திரனை யொத்திடும்
வடிவ மெய்திடும் வதன மங்கையே.

(இ - ள்:) மூன்றாமிடத்திற் பாபக்கிரகங்களிருக்க, மூன்றாமிடத்ததிபதி கேந்திரத்திலேனுந் திரிகோணத்திலேனும் இருக்க, மூன்றாமிடத்திற்கும் அவ்வதிபனுக்கும் சுபக்கிரகநோக்கம் இல்லாதொழியின் அக்காலத்துப் பிறந்தவனுக்குச் சகோதரர் பிறந்து இறப்பர். எ - று. (௩)

மூன்றாம்பாவம் முற்றிற்று.

---

# நான்காம் பாவம்

## மாதிரரிஷ்டம்

82. திங்க ளாலினிற் றங்க வெந்தொழிற்
றீயர் பார்த்திடச் சேரு நாலுளோன்
பொங்கு நீசநீள் பகையி னெய்தினும்
பொருவில் சந்திரன் றீய ரொடுறப்
பங்க முற்றமூன் றைந்தி னிற்கொடும்
பாப ரெய்தநா லாதி நீசமாய்
மங்கி டப்பகை யோரை மேவினு
மைந்த னைப்பயந் தாண்ம ரிப்பளே.

(இ - ள்:) மாதிருகாரகனாகிய சந்திரன் மாதிருத்தானமாகிய நாலாமிடத்திருக்க, அச் சந்திரனைப் பாபக்கிரகங்கள் பார்க்க, நாலாமிடத்ததிபதி பகைநீசமாயிருப்பினும்; சந்திரன் பாபக்கிரகங்களோடு கூட, மூன்றும் ஐந்தாமிடங்களிற் பாபக்கிரகங்களிருக்க, நாலாமிடத்ததிபதி பகைநீசமாயிருப்பினும் அக்காலத்துப் பிறந்தவனைப் பெற்ற மாதா நீடித்து வாழாது விரைந்து மரிப்பள். எ - று.

இப்பாவத்தாற் பெறப்படுவன: மாதிரு, கிருகம், வாகனம், பூமி, ஆரோக்கியம், சுற்றம், பாற்பசு, கீர்த்தி, வித்தை முதலியனவாம். (௧)

வேறு

83. நாலான விடங்கொடியோ ருறமதியங்
கொடியோர்க்கு நடுவி னெய்த
மேலானோர் நோக்கறினு நாலதிபன்
பன்னிரண்டெட் டாறின் மேவிப்
பாலான வலிகெடினு மலதிரவி
குசனாலிற் பயின்றிட் டாலு
மாலால மனைவிழியா யம்மகவின்
றாய்மரண மடைகு வாளே.

(இ - ள்:) நாலாமிடத்திற் பாபக்கிரகங்களிருக்க, சந்திரன் பாபக்கிரகங்கட்கு நடுவிலிருக்க, நாலாமிடத்துக்குஞ் சந்திரனுக்

குஞ் சுபக்கிரகநோக்கமில்லாதொழியினும்; நாலாமிடத்ததிபதி ஆறு எட்டு பன்னிரண்டாமிடங்களிற் சத்துருநீசமூடமாய்ப் பெலமிழந் திருப்பினும்; சூரியனும் செவ்வாயும் நாலாமிடத்திருப்பினும் அக் காலத்துப் பிறந்தவனைப் பெற்ற மாதா விரைந்து மரிப்பள். எ - று.

84. இந்நாலி லதிபதிசத் துருநீசம்
பெற்றுவலி யிழந்து போகப்
பின்னுள சந்திரன்போய்ப் பனுமி
ராறதனிற் பிறங்கி னாலும்
பன்னுளுங் கொடியவர்நா லனுகிடினும்
புவியினிடைப் பாலன் றேன்றி
னன்னேவோ வென்றழுத லறியமுனந்
தாய்மரண மடைகு வாளே.

(இ - ள்:) நாலாமிடத்ததிபதி பகைநீசமாகிப் பெலமிழந் திருக்க, அபரபக்கச் சந்திரன் பன்னிரண்டாமிடத்திலிருப்பினும், அன்றிப் பாபக்கிரகங்கள் நாலாமிடத்திலிருப்பினும் அக்காலத்துப் பிறந்தவனது மாதா விரைவில் மரிப்பள். எ - று. (௩)

## மாதிரு தீர்க்காயுள்

85. குற்றமிலார் நாலிருப்ப வதிபதிகட்
பாட்சிதிரி கோணங் கண்டம்
பற்றுடையுச் சம்பெறினு மம்புலியை
நல்லவர்கள் பார்க்க நல்லோர்
சுற்றிடக்கேந் திரத்தினிடைத் துலங்கிடினும்
பழுதுபடாச் சுதனைத் தானே
பெற்றவட்குப் பூரணமா மாயுளுண்டு
செழுங்கமலப் பெண்ணா னாளே.

(இ - ள்:) நாலாமிடத்திற் சுபரிருக்க நாலாமிடத்திபதி திரிகோணகேந்திரத்தானங்களில் நட்பு ஆட்சி உச்சம் பெற்றிருந் தாலும், அன்றிச் சந்திரன் சுபக்கிரகங்களின் பார்வை அல்லது சுபர் மத்தியம் பெற்றுக் கேந்திரங்களிலிருப்பினும் அக்காலத்துப் பிறந்த வனைப் பெற்ற மாதாவுக்குப் பூரண ஆயுளுண்டாம். எ - று. (௪)



## கிருகமுள்ளவன்

86. ஓதியநா லினையுடையா னுரையினி
லச்சமுற வோரை தன்னி
னாதிபதி தனலாப திரிகோண
கேந்திரநட் பாட்சி யுச்சஞ்
சோதியுறப் பெற்றிருக்கத் தோன்றுமவன்
றிசாபதியாய்த் துலக்கு மாடந்
தாதியிருங் கருங்கூந்தற் றையலே
மையலருள் தடங்க ணாளே.

(இ - ள்:) நாலாமிடத்ததிபதி இலக்கினத்தில் உச்சம் பெற் றிருக்க, இலக்கினாதிபதி இரண்டு பதினொன்றில் அல்லது திரிகோண கேந்திரங்களில் நட்பு ஆட்சி உச்சம் பெற்று அஸ்தமனமின்றி வீற் றிருக்க அக்காலத்துப் பிறந்தவன் திசாபதியாகி உன்னதமான வீடுகளைக் கட்டி வாழ்வான். எ - று. (௫)

## கிருகமில்லாதவன்

87. காண்டகுநா லாமிடத்தான் சரராசி
யாய்த்தீயர் கலப்ப வெட்டி
லாண்டகையைந் தினிலிருப்ப வாறுடையான்
வீறுடைபீ ராறி லாதன்
மாண்டகுமா றிடையாதல் வதிந்திடவே
யிப்புவியில் வந்த மைந்த
ரீண்டுறையவ் வில்லமில மென்பாரன்
பாற்கயற்க ணிணையி னாளே.

(இ - ள்:) நாலாமிடஞ் சரவிராசியாய் அதிற் பாபக்கிரகங்க ளிருக்க, எட்டாமிடத்ததிபதி ஐந்தாமிடத்திருக்க, ஆறுமிடத்ததி பதி ஆறுமிடத்திலேனும் பன்னிரண்டாமிடத்திலேனும் வீற்றி ருக்க அக்காலத்துப் பிறந்தவன் தான் வசித்தற்கோர் கிருகமில்லா தவனவன். எ - று. (௬)

## பூமியில்லாதவன்

88. சேமிக்கு நாலுடையான் சத்துருநீ
சத்தினிடைச் சேர விரா
றுமிக்க தானமுளான் றனத்தான
மணுகிட வன்போ டாருங்
காமிக்கு மோரைதனி னோரேழின்
மிகக்கொடியோர் கலப்ப வித்தப்
பூமிக்கு ஞதித்தமைந்தன் பூமிப்பே
றில்லாமற் போகு வானே.

(இ - ள்:) நாலாமிடத்ததிபதி பகைநீசமாயிருக்க, பன்னிரண்டாமிடத்ததிபதி இரண்டாமிடத்திருக்க, பாபக்கிரகங்கள் இலக்கினத்திலும் ஏழாமிடத்திலும் இருக்க அக்காலத்துப் பிறந்தவன் பூமியில்லாதவனாவன். எ - று. (௭)

## தனம், பூமி, வாகனம் முதலிய சுகமுள்ளவன்

89. ஆட்சியதா யுச்சமதாய் நட்பாய்நா
லினுக்கதிப னணுகி மேவ
மாட்சிமையுள் ளோரிவனை மகிழ்ச்சியுட
னேகூடி மருவி னாலும்
நீட்சியுற விருந்துநல்லோர் நோக்கிடவுந்
தோன்றுகின்ற நீதித் தோன்றல்
காட்சியுறு பொன்பூமி முதற்பொருள்கை
கூடிமனங் களித்து வாழ்வான்.

(இ - ள்:) நான்காதிபதி நட்பு ஆட்சி உச்சம் பெற்றிருக்க, சுபக்கிரகங்கள் அவனோடு கூடினும், அன்றி அவனைப் பார்க்கினும் அக்காலத்துப் பிறந்தவன் பொன், பூமி, வாகனம் முதலிய செல்வங்களெல்லாம் பெற்று மனமகிழ்ந்து வாழ்வன். எ - று. (௮)

நான்காம்பாவம் முற்றிற்று.

---

# ஆறாம் பாவம்

## சத்துருவுள்ளவன்

90. பத்தினிலக் கினமதனி னோரேழி
னாறுடையான் பயிலச் செவ்வாய்
சுத்தவிலக் கினமுறினு மாறுடையான்
கேந்திரத்தே துலங்கி யோரைக்
குய்த்துவிழி வைத்திடவா றினிற்பாப
ரிருந்திடவு முதித்து ளோர்க்குச்
சத்துருவா னவர்மிகுதி தானுண்டாங்
கட்டுண்ட தனத்தி னானே.

(இ - ள்:) ஆறாமிடத்ததிபதி இலக்கினத்திலேனும் ஏழாமிடத்திலேனும் பத்தாமிடத்திலேனும் வீற்றிருக்க, செவ்வாய் இலக்கினத்திலிருப்பினும்; ஆறாமிடத்ததிபதி கேந்திரங்களிலிருந்து இலக்கினத்தைப் பார்க்க, ஆறாமிடத்திற் பாபக்கிரகங்களிருப்பினும் அக்காலத்துப் பிறந்தவனுக்குச் சத்துருக்கள் மிகவும் உளராவர். எ - று.

இப் பாவத்தாற் பெறப்படுவன: சத்துரு, ரோகம், விரணம், சிறை, துக்கம், பந்துசனவிரோதம், திரவியநாசம், கிர்த்தி முதலியனவாம். (௯)

ஆறாம்பாவம் முற்றிற்று.

---

# ஏழாம் பாவம்

## விவாகமில்லாதவன்

91. உன்னியவே ழினுக்கதிபன் சத்துருநீ
சம்பாடா யுறினு மன்றேன்
பன்னியவா றதிபதியைக் கூடினும்பா
பியர்நோக்கம் வைத்திட் டாலுந்
துன்னியவே ழினிற்பாப ரிருக்கவவர்
விழிதொடினுந் துலங்கு கின்ற
மின்னியதுண் ணிடையாரை மணப்புரிந்து
நலம்பருக விதியில் லானே.

(இ - ள்:) ஏழாமிடத்ததிபதி பகைநீசமூடமாயிருப்பினும், அன்றி ஆறாமிடத்ததிபதியோடு கூடினாலும், அன்றிப் பாபக்கிரகங்கள் அவனைப் பார்ப்பினும், ஏழாமிடத்திற் பாபக்கிரகங்களிருக்க, அவ்வேழாமிடத்தைப் பாபக்கிரகங்கள் நோக்கினும் அக்காலத்துப் பிறந்தவன் மணம்புரிந்து இன்பநுகரும் பேறில்லாதவனாவன். எ - று.

இப் பாவத்தாற் பெறப்படுவன: போகம், விவாகம், விவகாரம், பந்துசமூகம், இராஜசன்மானம், வியாபாரம், விவாகதினம், களத்திரநாசம் முதலியனவாம். (க)

வேறு

92. இன்னாத பாபியர்கள் களத்திரத்தி னெய்தியிட
நன்னாத னாறெட்டுப் பன்னிரண்டி னண்ணியியல்
துன்னாத சத்துருநீ சம்பெறவே தோன்றுசுதன்
மின்னாரைக் கைப்பிடித்து வேட்டல்செய மாட்டானே.

(இ - ள்:) ஏழாமிடத்திற் பாபக்கிரகங்களிருக்க, ஏழாமிடத்ததிபதி ஆறு எட்டுப் பன்னிரண்டா மிடங்களில் பகைநீசமூடமாயிருக்க அக்காலத்துப் பிறந்தவன் விவாகஞ் செய்யமாட்டான். எ-று.

## ரோககளத்திரம்

வேறு

93. எண்ணியவே ழினுக்கதிபன் கொடியவர்க்கு
நடுவிருப்ப வேழிற் றீயோர்
நண்ணினும்பொல் லாவசுர குலக்குரவன்
பொல்லார்த நடுவுற் றானுங்
கண்ணியவிவ் வுலகினிடை யுதித்தருளு
மாடவன்கைப் பற்றுந் தார
மன்னியநோ யுழக்குமன்றே லாவியுகு
மென்னடைக்கோ ரன்ன மன்னாய்.

(இ - ள்:) ஏழாமிடத்ததிபதி பாபக்கிரகங்களுக்கு மத்தியில் வீற்றிருக்க ஏழாமிடத்திற் பாபக்கிரகங்களிருப்பினும், களத்திரகாரகனாகிய சுக்கிரன் பாபக்கிரகங்களுக்கு மத்தியிலிருப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் பாணிக்கிரகணஞ் செய்துகொண்ட களத்திரம் நெடிதும் நோயினால் வருந்தும்; அல்லது விரைந்து மரிக்கும். எ-று.

## கயரோகத்தாற் களத்திரநாசம்

வேறு

94. பயனாரு மேழதிப னாறெட்டுப் பன்னிரண்டில்
வயமான தற்றிருப்ப மழைக்கோனை மாபாபர்
கயமாக வுறப்பார்க்க வுதித்துள்ளோ னன்மனையாள்
கயரோகந் தானலைப்பக் காலனார் சார்வாளே.

(இ - ள்:) ஏழாமிடத்ததிபதி ஆறு எட்டுப் பன்னிரண்டா மிடங்களிற் றன்வலி யிழந்திருக்க, சுக்கிரனைப் பாபக்கிரகங்கள் கூட



அல்லது பார்க்க அக்காலத்துப் பிறந்தவனுடைய களத்திரம் கயரோகத்தால் வருந்தி இறக்கும். எ - று. (ச)

95. பனிதூற்றுங் கலைத்திங்கள் சலராசி பயின்றிருப்பச்
சனியூற்ற முடனெட்டிற் றங்கியிட வேழதனிற்
துனிவாயத் தீயருறத் தோன்றியவத் தோன்றலுடை
மனைவாழ்க்கைத் துணைவிகய ரோகத்தான் மாள்வாளே.

(இ - ள்:) சந்திரன் சலராசியில் வீற்றிருக்க, சனி எட்டாமிடத்திருக்க, ஏழாமிடத்திற் பாபக்கிரகங்களிருக்க அக்காலத்துப் பிறந்தவனுடைய களத்திரம் கயரோகத்தால் வருந்தி இறக்கும். எ - று. (ரு)

## தீர்க்கரோகத்தாற் களத்திரநாசம்

96. ஓரைதனிற் பன்னிரண்டி னோர்நான்கி னேழெட்டி
னாலுற வேழதிப னாறெட்டிற் பன்னிரண்டிற்
சேரவுல கத்தினிடைத் தான்பிறந்த திறற்செம்ம
னாரநெடும் பிணிபிடித்துச் சமனாரைச் சார்வாளே.

(இ - ள்:) செவ்வாய் இலக்கினத்திலேனும் நாலு ஏழு எட்டுப் பன்னிரண்டா மிடங்களிலேனும் இருக்க, ஏழாமிடத்ததிபதி ஆறுஎட்டுப் பன்னிரண்டா மிடங்களிலிருக்க அக்காலத்துப் பிறந்தவனது களத்திரம் நீடித்த ரோகத்தாற் பீடிக்கப்பட்டு உயிர்துறக்கும். எ - று. (கூ)

## பாக்கியகளத்திரம்

97. பற்றுசுப ரேழுறைய வாதிபதி தான்கேந்த்ர
முற்றதிரி கோணமுட னட்பாட்சி யுச்சமுற
மற்றஃதின் றேலதிபன் றூயரொடு வைகநல்லோர்
சுற்றியெழப் பார்த்திடினுந் தாரத்தாற் சூழ்திருவே.

(இ - ள்:) ஏழாமிடத்திற் சுபக்கிரகங்களிருக்க, ஏழாமிடத்ததிபதி கேந்திரதிரிகோணங்களில் நட்பு ஆட்சி உச்சமாகிப் பெலமடைந்திருப்பினும்; அன்றி ஏழாமிடத்ததிபதி சுபக்கிரகங்களோடு கூடினும், சுபர்மத்தியமாகினும், அல்லது சுபக்கிரகங்களாற் பார்க்கப்படினும் அக்காலத்துப் பிறந்தவனுக்குக் களத்திரத்தாற் சகல பாக்கியமும் வந்துசேரும். எ - று. (எ)

ஏழாம்பாவம் முற்றிற்று.

# எட்டாம் பாவம்

## வாதரோகத்தான் மரணம்

98. வேந்தனிரு காலிருப்ப வெய்யவர்கள் விழிவைக்கச்
சாந்தமுறு கலைத்திங்கள் சலராசி தனிலெய்தப்
போந்துலகி னுப்பவித்த புருடனுக்கு வாதநோய்
தோய்ந்துகெடுந் தென்றிசையிற் செல்பதியை யடைவானே.

(இ - ள்:) குரு எட்டாமிடத்திருக்க, பாபக்கிரகங்கள் அக் குருவைப் பார்க்க, சந்திரன் சலராசியில் வீற்றிருக்க அக்காலத் துப் பிறந்தவன் வாதரோகத்தாற் பீடிக்கப்பட்டு இறப்பன். எ-று.

இப் பாவத்தாற் பெறப்படுவன: பிணி, மரணம், துக்கம், ஆயுள், இரணம், பகை, திரவியநாசம் முதலியனவாம். (௧)

## பிரமேக கயரோக வாதரோகங்களான் மரணம்

99. மழைக்கோளெட் டிற்றிருப்ப மன்னுகொடுந் தீமனத்துப்
பிழைக்கோளங் கவன்றன்னைப் பெருநயனஞ் செய்திடிகி
லிழைக்கோது நுண்ணிடையா யீண்டுதித்தோன் பிரமேக
தழைக்கான கயரோகம் வாதமுறச் சாவானே. [ந்

(இ - ள்:) சுக்கிரன் எட்டாமிடத்திலிருக்க, இச் சுக்கிரனைப் பாபக்கிரகங்கள் பார்க்கில் அக்காலத்துப் பிறந்தவன் பிரமேக ரோகம், கயரோகம், வாதரோகம் என்னும் இவற்றால் வருந்தி இறப்பன். எ - று. (௨)

## சலரோகத்தான் மரணம்

100. குறைமதியெட் டிறப்பாபர் சத்துருநீ சங்கொண்டே
நிறைவிழிவைக் கினுஞ்சாம கிறப்புலவ னெட்டதனி
னுறைதாத்தீ யோர்நோக்க முய்த்திடினு முதித்துள்ளோ
னறைதருநீள் சலரோக மடுத்தாவி யுகுவானே.

(இ - ள்:) அபர சந்திரன் எட்டாமிடத்திருக்கப் பாபக்கிர கங்கள் பகை நீசம் பெற்றிருந்து அவனைப் பெலமாகப் பார்ப்பினும், புதன் எட்டாமிடத்திருக்கப் பாபக்கிரகங்கள் அவனைப் பார்ப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் சலரோகத்தால் வருந்தி இறப்பன். எ - று. (௩)

எட்டாம்பாவம் முற்றிற்று.

---

# ஒன்பதாம் பாவம்

## பிதிரரிஷ்டம்

101. ஒன்பானுக் குடையவன்போய்ப் பாபருட னுறத்திய
ரோன்பான்மூன் றாறுறவல் லாவிடினென் றில்லாத
வொன்பான்பத் தினிற்புகுதி னுயர்தாதை மரிப்பானு
லொன்பானுஞ் செழுமணியி னொளிபழுத்த குழையாளே.

(இ - ள்:) ஒன்பதாமிடத்ததிபதி பாபக்கிரகங்களோடு கூட, பாபக்கிரகங்கள் மூன்று ஆறு ஒன்பதா மிடங்களிலேனும் அன்றி எட்டுப் பத்தா மிடங்களிலேனு மிருக்க அக்காலத்துப் பிறந்தவ னுக்குப் பிதா அரிஷ்டமாவன். எ - று.

இப் பாவத்தாற் பெறப்படுவன: பிதா, தருமம், பாக்கியம், பிதிர்பரம்பரை, உபதேசம், ஔஷதம் முதலியனவாம். (௧)

102. ஐயமிலோன் பானுடையா றெட்டுப் பன்னிரண்டி
னெய்திவலி கெடினுமொன்பா னிரவிகுச னிருந்திடினுந்
துய்யவொன்பா னதிபன்சத் துருநீசத் திடைதுலங்கக்
கையரோன்பா னோக்கிடினும் பிதாமரண மெனக்கரைவார்.

(இ - ள்:) ஒன்பதாமிடத்ததிபதி ஆறுஎட்டுப்பன்னிரண் டாமிடங்களிற் றன்வலியிழந்திருப்பினும், ஒன்பதாமிடத்திற் சூரி யனுஞ் செவ்வாயும் இருப்பினும், ஒன்பதாமிடத்ததிபதி பகை நீசமாயிருக்க ஒன்பதாமிடத்தைப் பாபக்கிரகங்கள் பார்ப்பினும் அக்காலத்துப் பிறந்தவனுக்குப் பிதா அரிஷ்டமாவன். எ-று. (௨)

ஒன்பதாம்பாவம் முற்றிற்று.

# பத்தாம் பாவம்

## தொழிலற்றவன்

வேறு

103. பத்தினிற் பாப ரிருந்திடப் பத்தி
னதிபனெட் டாறுபன் னிரண்டு
னெய்த்துட னிருப்ப வலதுசத் துருவாய்
நீசமாய் மூடமா யெய்தச்
சித்தநன் கறியாப் பாபிய ரிவனைத்
திகழிரு விழியினு ணோக்கிற்
கைத்தொழில் புரியா துண்டியுண் டிருந்து
காலத்தை வீணிலே கழிப்பான்.

(இ - ள்) பத்தாமிடத்திற் பாபக்கிரகங்களிருக்க, பத்தாமிடத்ததிபதி ஆறுஎட்டுப்பன்னிரண்டா மிடங்களிலேனும் பகை நீசமூடமாயேனும் பெலமிழந்திருக்க, பாபக்கிரகங்கள் அவனைப் பார்ப்பின் அக்காலத்துப் பிறந்தவன் கைத்தொழில் யாதேனுஞ் செய்யாதவனாய்ப் பரான்னமே புசித்துக்கொண்டிருந்து தனது வாணாளை வீணாள் கழிப்பன். எ - று.

இப்பாவத்தாற் பெறப்படுவன: கருமம், ஞானம், தெய்வபத்தி, சிவகாருண்ணியம், கீர்த்தி, சௌக்கியம், பிதா முதலியனவாம். (க)

## இராஜமந்திரி, செல்வன், அஷ்டைசுவரியவான்

104. பத்துபத் துடையா னுச்சமாய்க் கண்ட
மெய்திடி னிராசமந் திரியாம்
வாய்த்தநட் பாட்சி யாகியே கேந்திர
மருவிடின் வளர்பெருந் திருவா
நீத்தலில் தூயர் பத்திடை நிற்கப்
பத்துளான் கேந்திர நிலைக்கக்
காத்திடு திரிகோ ணம்பெறி லட்டை
சுவர்யவா னுமெனக் கணித்தார்.



(இ - ள்:) பத்தாமிடத்ததிபதி கேந்திரம் பெற்று உச்சத்திருப்பின் அக்காலத்துப் பிறந்தவன் அரசனை யடுத்து அவனுக்கு மந்திரியாவன்; பத்தாமிடத்ததிபதி கேந்திரம்பெற்று நட்பு ஆட்சியாயிருப்பின் அக்காலத்துப் பிறந்தவன் பெருஞ் செல்வனாவன்; பத்தாமிடத்திற் சுபக்கிரகங்களிருக்க பத்தாமிடத்ததிபதி கேந்திர திரிகோணங்களிலிருப்பின் அக்காலத்துப் பிறந்தவன் அஷ்டைசுவரியவானாவன். (உ)

## சற்கன்மி, துர்க்கன்மி, வெகுபிரயோசனமடைபவன்

105. நன்னர்சேர் பத்தி னல்லவ ரிருக்க
நோக்கிட நற்றொழில் புரியு
மன்னியர் பார்க்கப் பத்துளோ னிரா
றெட்டிலா றமரிற்றுர்க் கன்மி
மன்னிய பத்தி லதிபதி பரமோச்
சம்பெற வோரையிற் பகரு
மின்னனை யாளே நல்லவ ரிருக்கப்
பார்த்திட வெகுபலன் மேவும்.

(இ - ள்:) பத்தாமிடத்திற் சுபக்கிரகங்க ளிருக்க, அல்லது சுபர் அதனைப் பார்க்க அக்காலத்துப் பிறந்தவன் சற்கன்மங்களையே செய்வன்; பத்தாமிடத்தைப் பாபக்கிரகங்கள் பார்க்க, பத்தாமிடத்ததிபதி ஆறுஎட்டுப்பன்னிரண்டா மிடங்களிலிருப்பின் அக்காலத்துப் பிறந்தவன் துர்க்கன்மங்களையே செய்பவனாவன்; பத்தாமிடத்ததிபதி பரமோச்சபாகையிலிருக்க, இலக்கினத்திற் சுபக்கிரகங்க ளிருப்பினும் அன்றி அதைப் பார்ப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் வெகு பிரயோசனங்களை யடைவான். எ - று. (ங)

பத்தாம்பாவம் முற்றிற்று.

## பதினோராம் பாவம்

### செல்வன், தனம் தானியம் பூமி இவைகள் நாசமடைபவன்

**106.** ஆயமே லாட்சி யுச்சமாங் கோட்க
ளமர்தர வதிபதி கேந்திரந்
தேய்விலாத் திரிகோ ணம்பெறின் மிக்க
செல்வமுண் டாமெனத் தெரிப்பார்
மேயபன் னிரண்டிக் கதிபன்கல் லியத்தின்
விளங்கிரண் டேழிடை மேவ
நேயமாய்ப் பிறந்தோன் றுனிய நிதிய
நீணிலம் பலபொரு ளுசம்.

(இ - ள்:) பதினோராமிடத்தில் ஆட்சியுச்சக் கிரக மிருக்க, பதினோராமிடத்ததிபதி கேந்திரதிரிகோணம் பெற்றிருப்பின் அக்காலத்துப் பிறந்தவன் மிகுந்த செல்வனாவன். பன்னிரண்டாமிடத்ததிபதி இலக்கினத்திலேனும் இரண்டாமிடத்திலேனும் ஏழாமிடத்திலேனும் வீற்றிருக்க அக்காலத்துப் பிறந்தவன் தனம், தானியம், பூமி முதலிய செல்வம் அனைத்தும் நாசமடையப்பெறுவன். எ - று.

இப் பாவத்தாற் பெறப்படுவன: லாபம், செல்வம், வித்தை, ஞானம், மனைவி, அடிமை, வாகனம் முதலியனவாம். (க)

பதினோராம்பாவம் முற்றிற்று.

---

## பன்னிரண்டாம் பாவம்

### தனதானியம் பெற்று வாழ்பவன்

**107.** பன்னுபன் னிரண்டிக் குடையவ னெட்டா
றதனிடைப் பயில்வுற வலது
சொன்னவெட் டதிபன் பன்னிரண் டுறினும்
பன்னிரண் டாதிபன் றொடர்பிற்
பின்னமாய் நீசம் பகையிடை மருவ
வாறுளான் பெருகுபன் னிரண்டிற்
றுன்னினுந் தனதா னியம்பல பெற்றுச்
சுகத்துட னிலத்திடை வாழ்வன்.

(இ - ள்:) பன்னிரண்டாமிடத்ததிபதி ஆறுஎட்டா மிடங்களிலிருப்பினும், அன்றி எட்டாமிடத்ததிபதி பன்னிரண்டாமிடத்திருப்பினும், பன்னிரண்டாமிடத்ததிபதி பாபக்கிரகங்களோடு கூடிப் பகைநீசமாயிருப்ப ஆறுமிடத்ததிபன் பன்னிரண்டாமிடத்திருப்பினும் அக்காலத்துப் பிறந்தவன் தனதானிய முதலிய சம்பத்துக்களெல்லாம் பெற்றுச் சுகசீவியாவன். எ - று.

இப் பாவத்தாற் பெறப்படுவன: நஷ்டம், அதன்மம், சயனசௌக்கியம், தானம், தியாகம், யாகம் முதலியனவாம். (க)

### துவாதசபாவங்கட்கும் புறனடை

**108.** தூயசந் தான தீபிகை யதனிற்
சொல்லிய தீப்பல னெல்லா
மாயபொன் வெள்ளி வளர்கலைத் திங்க
ளழகுற நோக்கிடிற் றிருங்
காய்சினக் களிற்றின் கோடுபோ னிமிர்ந்து
கர்ப்புரச் செப்பெனப் பணைத்து
மேயதெள் ளமுத கலசத்தை வென்று
விளங்கிய கொங்கைமின் னாரசே.

(இ - ள்:) சுத்தமான சந்தானதீபிகை என்னும் இந்நூலில் (துவாதசபாவங்களும் பற்றிச்) சொல்லிய (சுபாசுபபலன்களுள்) அசுபபலன்களெல்லாம், சுபர்களாகிய குருவும் சுக்கிரனும் பூரண சந்திரனும் என்னுமிம் மூவருளொருவர் (உச்சசுவமித்திருக்ஷேத்திர ஸ்தானபெல முதலிய பெலமுடையராயிருந்து அவ்வசுபபலன்களைக் குறிப்பனவாகக் கருதப்படும் தானங்களையேனும், அத்தானாதிபரையேனும் அக்காரகரையேனும்) அழகுபொருந்த நோக்கின் ஒழிந்துவிடும். எ - று.

ஆகவே, சுபபலன்களைக் குறிப்பனவாகக் கருதப்படும் தானங்களையேனும் தானாதிபர்களையேனும் காரகர்களையேனும் பாபர்களாகிய செவ்வாய் சனி இராகு கேது என்னுமிவர்களுள் ஒருவர் பெலமுற்றிருந்து நோக்கின் அச் சுபபலன்கள் ஒழிந்துவிடும் என்பதும் பெறப்படுதல் காண்க.

ஒருவனுக்குப் பூர்வகன்ம பலத்துக்கேற்பச் சனனகாலந் தொடங்கி மரணகாலம் வரையும் உளவாகும் சுகதுக்கானுபவங்களெல்லாம் இலக்கினமுதலிய துவாதசபாவங்களாலும் அறியப்படுவனவாதலால் அவ்விலக்கின முதலிய காரகத்தானங்களும், அத்தானாதிபர்களும், அத்தானத்திருப்பவர்களும், அக்காரகர்களும் அடைந்திருக்கும் பெலதுர்ப்பெலங்களை நோக்கம், சேர்க்கை, அஷ்டகவர்க்கம், தசவர்க்க முதலியவற்றானறிந்து, அவற்றிற்கியைய அச் சுகதுக்கானுபவங்களை ஊகித்துணர்ந்துகொள்க. (௨)

பன்னிரண்டாம்பாவம் முற்றிற்று.

---

# சந்தான சரிதை

## சதுர்யுகங்களுக்கேற்ற இலக்கின நிரூபணம்

**109.** ஆதியாங் கிரேத யுகத்தினிற் கெர்ப்பா
தானமே யாதியா கவும்பின்
சோதியாந் திரேதந் தனிற்குறி கண்ட
தாதியா கவுந்துவா பரத்திற்
பேதியாச் சென்னித் தோற்றமே யாதி
யாகவும் பெருங்கலி யுகத்தி
னீதியா மகவு பூமியில் விழுந்த
தாதியா கவுங்கொள னெறியே.

(இ - ள்) (சதுர்யுகங்களுள்) முதல் யுகமாகிய கிரேதயுகத்தில் (சில கிரியையோடு) கெர்ப்போற்பத்தியை உத்தேசித்துக்கொள்ளும் முகூர்த்தமே இலக்கினமாகவும், அதற்குப் பின் நிகழும் பரிசுத்த யுகமாகிய திரேதாயுகத்தில் (பிரசவவேதனையுற்றுக்) குறிகாணப்பட்ட அந்தநேரமே இலக்கினமாகவும், (அதற்குப் பின்னிகழுந்) துவாபரயுகத்தில் மாறுபடாத சிரசுதயமாகுங் காலமே இலக்கினமாகவும், (அதற்குப் பின்னிகழுங் கடையுகமாகிய இப்) பெரிய கலியுகத்தில் நீதியாகச் சிசுப் பூமியிற் பிரவேசஞ்செய்த அந்தநேரமே இலக்கினமாகவும் கொள்ளுதல் சாஸ்திரசித்தமாம். எ - று.

சிசு பூமியிற் பிரவேசமான கடிகையைச் சுவதேசகாலவளவை உள்ளபடி வரையறுத்துக் காட்டுங் கடிகாரம் வாயிலாகவேனும் பிறவழியாலேனும் மிக நுணுகி ஆராய்ந்தறிந்தவழியன்றி அச் சிசுவின் சுகதுக்கானுபவங்களை உள்ளபடி யறிதல் கூடாதாகலானும், அக் கடிகையைப் பிறழ உணரின் அதை ஆதாரமாகக்கொண்டு ஆராயப்படும் சுகதுக்கானுபவங்களும் பிறழும்; அவை பிறழவே ஜோதிஷசாஸ்திரத்தில் விசுவாசம் இல்லாதொழியும்; அஃதொழியவே சமயபத்தியுங் குன்றிவிடும் ஆகலானும், சிசுவின் சனனகடிகை மிக நுணுகி உள்ளபடி ஆராய்ந்தறியப்படற்பாலதென்றுணர்க. (௧)

## இல்வாழ்க்கைக்குச் சந்தானத்ததின்றியமையாமை

**110.** உலகினில் வாழ்வு பூண்டுளோன் சகல
செல்வமு முற்றிருந் தாலு
மிலகிய மகவை யினிதினீன் றிடாதா
னிருமையும் பயன்பெறு னதனாற்
பலதவஞ் செய்து மகப்பெறல் வேண்டும்
பரவுகன் னியர்தமை வேட்ட
லிலவுசந் ததியின் பொருட்டலர்க் காமப்
பொருட்டல வெனமறை நிகழ்த்தும்.

(இ - ள்:) (துறவறநெறியை அடையாது) உலகத்திற் பாரி யோடுங் கூடி நடாத்தும் இல்வாழ்க்கைநிலையைப் பூண்டுகொண்டவன் சகல ஐசுவரியத்தையும் பொருந்தியிருப்பினும் விளங்குகின்ற மக்களை இனிமையாகப் பெறுதவன் இம்மை மறுமை இரண்டின் பிரயோசனங்களையும் பெறமாட்டான் ஆதலினாலும், துதிக்கப்படுகின்ற கன்னிகைகளைக் கல்யாணஞ் செய்தல் சற்புத்திரப்பேற்றின் பொருட்டேயன்றிக் காமநுகர்வின்பொருட்டன்றென்று வேதஞ் சொல்லும் ஆதலினாலும், பல தவங்களைச் செய்தேனும் மக்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். எ - று. (௨)

## புத்திர புத்திரிகளா லெய்தும் பயன்

**111.** ஆதலா லுலகி லாண்மகப் பெற்று
லிருமைக்கும் பயனினி தளிக்குங்
காதல்கூர் கின்ற பெண்மக வாயி
னிம்மையிற் பயனிலை கருதிற்
றீதிலா விவாகஞ் செய்தளித் திடுகின்
மறுமையிற் றிகழ்பயன் சேரும்
பேதையர் தம்மைப் பெற்றன மென்று
பேதுறன் மிகப்பெரும் பிழையே.

(இ - ள்:) இவ்வுலகத்தில் ஒருவன் புத்திரனைப் பெறுவானாயின் (அப் புத்திரன்) இம்மை மறுமை யிரண்டினும் (அவனுக்கு) நல்ல பயனைக் கொடுக்கும். ஆசையைத் தருகின்ற புத்திரியைப் பெறுவானாயின் நினைக்குமிடத்து (அப் புத்திரியால் அவனுக்கு) இம்மையில் அடையப்படும் பயனில்லை; (ஒரு நன்மணவாளனுக்கு



அப் புத்திரியை) விதிப்படி விவாகஞ்செய்து கொடுப்பின் மறுமையில் நல்ல பயன் வந்து சாரும். ஆதலினால், புத்திரிகளைப் பெற்றோமே என்று துன்புறுதல் மிகப் பெரிய குற்றமாகும். எ-று. (௩)

**112.** துக்கமுற் றந்தப் பெண்சிறுர் தமக்குஞ்
சூழுமக் கெர்ப்பங்க டமக்கும்
விக்கினஞ் செய்யி னளப்பிலாக் காலம்
வெய்யபாழ் நரகிடை வீழ்வர்
தொக்கவித் தகையாற் சோடச மான
பெண்சிறுர் வந்துதோன் றுகினும்
மிக்கநன் மனதிற் களிப்புறல் வேண்டு
மென்னநால் வேதமும் விளம்பும்.

(இ - ள்:) கவலைகொண்டு அப் பெண்மக்களுக்கும் ஆராயப்படும் அப் பெண்கருப்பங்களுக்குந் தீங்கு செய்யின், (அத் தீங்கு செய்தார்) அளவில்லாத காலங் கொடிய பாழாகிய நரகத்தில் விழ்ந்து வருந்துவர். பொருந்திய இந்த நியாயத்தால் பல புத்திரிகள் வந்து பிறப்பினும் மனசில் மிகவும் மகிழ்ச்சிகொள்ளல் வேண்டும் என்று நான்கு வேதங்களுஞ் சொல்லும். எ - று. (௪)

## புணர்ச்சி செய்தற்கு நியமமாக விதித்த தினம்

**113.** பாவையர் பூப்புத் திரும்புன லாடு
நாண்முதற் பன்னிரு நாளுந்
தாவிலாக் கெர்ப்போற் பத்தியா மதனிற்
பரத்திரி தனைத்தொட றவிர்ந்து
மேவிய விரவி னன்முகூர்த் தத்தின்
வியன்கருப் புகுந்திடு மளவு
நாவலோர் சொன்ன நாடனிற் கூட
னரர்புரி கடனென நவில்வார்.

(இ - ள்:) ஸ்திரீகள் வீட்டுக்குவிலக்காயிருந்து நீரின் முழுகும் நாளாகிய நான்காம் நாள் முதற் பன்னிரண்டு நாளினும் கெர்ப்பத்தினது உற்பத்தி உளதாகும். (ஆதலால்) அப் பன்னிரண்டு நாளினும் பரஸ்திரீகளைத் தழுவுதல் ஒழிந்து, சான்றோர் விதித்த தினத்தில் இராக்காலத்திற் பொருந்திய நல்ல முகூர்த்தத்தில் மேலாகிய கருப்பம் உற்பத்தியாகும் வரையும் தங்கள்

நாயகிகளோடு கலத்தல் இல்வாழ்வார் யாவருஞ் செய்யவேண்டிய கடனாகும் என்று அறிஞர் சொல்வர். எ - று.

நன்முகூர்த்தம் என்றது சற்புத்திரோற்பத்திக்குரிய முகூர்த்தத்தை. (௫)

## நியமமாக விதித்த தினத்திற் புணராதொழியிற் படுங்குற்றமும், ஆண்பெண் உற்பத்தியாதற்குரிய தினவரையறையும்

**114.** நன்னுரு தகமா யெறிபுனற் படிந்த
நான்முதற் பன்னிரு நாளு
மென்னிய கருப்ப மெய்திடு மளவும்
பன்னியைக் கூடா திருப்பி
னண்ணிய கருப்ப மழித்தவர் புகுது
நாகுறு மொற்றைநா ளணையிற்
பெண்ணுறு மிரட்டை யானநா ளணையிற்
பிறங்குறப் பிறக்குமாண் மகவே.

(இ - ள்:) (மாசந்தோறும் உண்டாகும்) பூப்புக் கழிந்து நீரில் முழுகிய நான்முதற் பன்னிரண்டு நாளிலும் விரும்பிய கருப்பம் உற்பத்தியாகும் வரை நாயகன் தன் நாயகியை (விதித்த நாட்களிற்) புணராதொழிவனாயின், பொருந்திய கருப்பத்தைச் சிதைத்தவர்கள் அடையும் நரகத்தை (அவன்) அடைவன். (அவளை அப் பன்னிரண்டு நாளிலும்) ஒற்றையாகிய நாளிற் புணர்வானாயிற் புத்திரிகளை உற்பத்தியாவர். இரட்டையாகிய நாளிற் புணர்வனாயின் (அவன் சந்ததி) விளங்கப் புத்திரரே உற்பத்தியாவர். எ - று. (௬)

## புணர்ச்சிசெய்தற்கு விலக்கிய பருவம்

**115.** இருதுவா வதற்கு முன்னமுங் கெர்ப்ப
மெய்திய காலத்துஞ் சுதனைக்
கருதியின் றெடுத்து மாதரு தகந்தான்
கலந்திடா திருக்குமப் போதும்
பெருவய தாகி மாதரு தகம்போய்ப்
பெட்பறு காலத்து மகிழ்வா
யுருவுடை மாதர் தமையணைந் திடுகி
னலியுரு வெடுத்தலைந் துழல்வார்.



(இ - ள்:) (நாயகர்) அழகுடைய தங்கள் நாயகிகளை இருதுவாவதற்கு முன்னும், கெர்ப்பமடைந்திருக்குங் காலத்திலும், புத்திரனைப் பெற்றெடுத்து மாதந்தோறும் உண்டாகும் பூப்புக் கலக்கப் பெறாதிருக்கும் அக்காலத்திலும், வயதுசென்று மாதவிடாய் நீங்கிக் (காமநுகர்வின்மேல்) ஆசையற்றிருக்கும் அப் பருவத்திலும் விரும்பித் தழுவுவாராயின் (அவர்கள் மறுசனனத்தில்) அலிவடிவெடுத்துப் பிறந்து அலைந்து துன்புறுவார்கள். எ - று.

நாயகர் நாயகிகளை இருதுவாவதற்குமுன்னப் புணரின் இருவருந் தேகபலங் குன்றி ரோகிகளாதலும், கெர்ப்பமெய்தியகாலத்துப் புணரின் அக் கெர்ப்பத்துக்குத் தீங்கு நிகழ்தலும், மகவை ஈன்றெடுத்து மாதருதகங்கலந்திடாதிருக்கும்போது புணரின் சிசுவுக்குப்பால்குன்றுதலோடு அநேகரோகங்கள் உளவாதலும், பெருவயதாகி மாதருதகம்போய்ப் பெட்பறுகாலத்துப் புணரின் நாயகருக்கு அநேகரோகங்கள் உளவாதலோடு ஆயுள் க்ஷீணமாதலும் இம்மைப்பயனாகக்கொள்க.

## புணர்ச்சிக்கு யோக்கியமாகாக் காலமும், செய்யத்தகாதனவும்

**116.** பூத்தநா ளாலிற் புணருகிற் புருடன்
றன்னுடன் மனைவியும் பொற்பும்
வாய்த்தபுத் திரரு மாணமாய் நரகத்
தெய்துவ ரான்குறி மனைவி
பார்த்திடிற் புருட னவள்குறி நோக்கிற்
பாரியுண் டிடலவன் பார்க்கி
னீத்திடும் பகலிற் புணரினு முளும்போம்
பாலரு நெறியிலா தநிப்பார்.

(இ - ள்:) பூப்புற்ற நாள்முதல் நான்கு நாளிலும் புணர்ச்சி செய்யில் நாயகனும் நாயகியும் (தங்கள்) அழகும் (தமக்கு) வாய்த்த புத்திரரும் நாசமாகத் தாமும் நரகத்தை அடைந்து வருந்துவார்கள். விலக்கப்பட்ட பகற்காலத்தில், நாயகி நாயகனது குறியைப் பார்ப்பினும், நாயகன் நாயகியினது குறியைப் பார்ப்பினும், (அவர்கள்) புணர்ச்சிசெய்யினும், அன்றி எப்பொழுதாயினும் நாயகி போசனஞ்செய்தலை நாயகன் பார்ப்பினும் (இருவருக்கும்) ஆயுளுங் குறைவடையப் புத்திரரும் நெறியற்றவர்களாய்ப் பிறப்பார்கள். எ-று. (அ)

## புணர்ச்சிசெய்தற்கு விலக்கிய திதி முதலியன

**117.** தையலை முதலாந் திதிதனிற் கூடி
லன்பறுஞ் சட்டியே விரோதம்
பொய்யிலட் டமிநோய் நவமியிற் றுக்கம்
பொருந்துமே காதசி பாப

மையறு தூய துவாதசி தன்னின்
மருவிடிற் பூமயின் மருவாள்
மெய்யினோர் புகழுஞ் சதுர்த்தசி தன்னின்
மேவிடி னோயென விதிப்பார்.

(இ - ள்:) புருஷன் தனது நாயகியைப் பிரதமையிற் புணர்வனாயின் (அவர்களிடத்து அன்னியோன்னியமாயுள்ள) அன்பு நீங்கிவிடும். சட்டியிற் புணர்வனாயின் (இருவருக்கும்) விரோதமுண்டாகும். அட்டமியிற் புணர்வனாயின் (இருவருக்கும்) நோயுண்டாகும். நவமியிற் புணர்வனாயின் (இருவருக்கும்) துக்கமுண்டாகும். ஏகாதசியிற் புணர்வனாயின் (இருவருக்கும்) பாபமுண்டாகும். துவாதசியிற் புணர்வனாயின் (அவர்களை) இலக்குமி விட்டு நீங்குவள். சதுர்த்தசியிற் புணர்வனாயின் (இருவருக்கும்) நோய் உண்டாகும் என்று நூலோர் சொல்வர். எ - று.

எனவே, ஒழிந்த திதிகள் புணர்ச்சிக்கு உரியன என்பது பெறப்படும். (௯)

118. சருவா மாதப் பிறப்பினின் மகத்தி
னோடுஞா யிற்றினி லசூசி
சார்தரு நாளி லாதிரை யெனுநாட்
கர்ப்பநாண் மூன்றிற்சந் திரன்போ
யோரையா மெட்டிற் புகுதுநாள் வியதி
பாதநாள் விரதநா ளுவந்து
பேருறு பிதிர்க் கூட்டுநாட் புணரின்
வயதறும் வறுமைநோய் பிடிக்கும்.

(இ - ள்:) அமாவாசை பூரணைகளிலும், சங்கிரமதினங்களிலும், மகநக்ஷத்திரத்திலும், ஞாயிற்றுக்கிழமையிலும், ஜனனமரண ஆசௌசகாலங்களிலும், திருவாதிரை நக்ஷத்திரத்திலும், சன்மத்திரய நக்ஷத்திரங்களிலும், அட்டமராசி நக்ஷத்திரங்களிலும், வியதிபாதயோகத்திலும், தான் அனுஷ்டிக்கும் விரததினங்களிலும், இறந்துபோன தனது பிதா மாதா முதலிய பிதிர்களுக்கு மகிழ்ந்து ஊட்டுந் தினமாகிய சிராத்ததினத்திலும் புணரின் ஆயுள் குன்றும்; தாரித்திரியமும் நோயும் சார்ந்து வருத்தும். எ-று. (௧௦)

### சூதகாசௌச தோஷமில்லாத காலம்

119. சேயினை நாபிச் சேதனம் பண்ணிச்
செழும்புன லாட்டுதன் முன்னு
மாய்தரும் பிரேதந் தனைக்குளிப் பாட்டி
வைத்தலங் கரிப்பதன் முன்னு



மாயிழை மடவார் பூப்புறு நான்கு
தினமகன் றரும்புன லதனிற்
றோய்தல்செய் ததற்பி னுதிரநீர் படினுஞ்
சூதக மில்லையென் றுரைப்பார்.

(இ - ள்:) சிசுவுக்குக் கொப்பூழ்க்கொடி யறுத்து நீரிற் கழுவுதற்கு முன்னரும், பிரேதத்தைக் குளிப்பாட்டிவைத்து (ஆடையாபரணாதிகளால்) அலங்காரஞ்செய்தற்கு முன்னரும், ஸ்திரீகள் பூப்புற்று விலக்காயிருக்கும் நான்கு தினமும் நீங்கி (ஐந்தாந்தினத்தில்) நீரில் முழுகியபின் சூதகநீர் உண்டாயினும் சூதகாசௌசங்கள் இல்லையென்று அறிஞர்கள் சொல்வர். எ - று. (௧௧)

### நாயகன் மலடனாயவழியும், நாயகி மலடியாயவழியும் செயற்பாலது

120. பற்றுசா தகத்தி லங்கலக் கணத்திற்
றன்மனை மலடெனப் படுகின்
மற்றொரு விவாகம் புத்திரோற் பத்திக்
கேதுவாய் வரித்திடல் வழக்கா
மிற்றதா மலடன் யானென வுணரிற்
றன்குலத் தொருவனை யெய்திச்
சொற்றரு மனைவி யுடன்புயங் குவித்துப்
புதல்வரைத் தொழுதலொன் றெறியே.

(இ - ள்:) ஜனனகாலத்தெழுதிய ஜாதகத்தின் மூலமாகவும் சாமுத்திரிகாலக்ஷணமூலமாகவும் தனது மனைவியே மலடாந்தன்மையுடையள் எனக் காணப்படின், புத்திரர் பிறத்தற்கு அனுகூலமாகப் பிறிதொரு கன்னிகையை விவாகஞ்செய்தல் சான்றோர் வழக்காம். அங்ஙனமின்றி, ஆகா! நானே மலடாந்தன்மையுடையேன் என்று மேற்குறித்த ஏதுக்களால் அறியின், தன் குலத்திற் பிறந்த (தனது ஞாதியில்) ஒருவனைச் சார்ந்து, (அவனுக்குத் தனது அபிப்பிராயத்தைச் சொல்லி), தன்சொற்கடவாத (தனது) தருமபத்தினியோடு (அவனைத்) தழுவுவித்து, புத்திரரைப் பெற்று வணங்குதல் தொன்றுதொட்ட வழக்கேயாம். எ - று.

இவ்வழக்கு இக் கலியுகத்தில் கூடாதென்று காலதத்துவவுணர்ச்சிபெற்ற மஹான்கள் விதித்துள்ளனர். (௧௨)

### மனுதருமசாஸ்திர முதலிய கலைகளைக் கற்குமுறை

121. அருட்குந் தூய நன்மனு நீதி
சோதிடம் புரோகித மழகார்
புருடலக் கணஞ்சிர் வைத்திய முற்றுங்
கற்றிடான் புலவனென் றிடுகின்

மருடரும் பிரமக் கொலைபுரி தோட
மாகும்வெம் பவமுறு மதனாற்
றெருடா முழுது மீதெலாந் தெரியக்
கற்றிடல் புலமையோர் திறனே.

(இ - ள்:) கிருபையைத் தருகின்ற சுத்தமாகிய நல்ல மனுவின் தருமசாஸ்திரமும், சோதிடசாஸ்திரமும், ஆசாரியத்துவத்துக்குரிய சமயசாஸ்திரமும், அழகுநிறைந்த சாமுத்திரிகாலக்ஷணநூலும், சிறந்த வைத்தியசாஸ்திரமும் என்னும் இக் கலைகளை முற்றுங் (குருமுகமாகக்) கற்றறியாதவன் நான் அவற்றிற் புலமையுடையேன் என்று சொல்லுகில் (அது) மயக்கத்தைத் தருகின்ற பிரமகத்திதோஷத்துக் கொப்பாகும். (அஃதன்றி அவனுக்குக்) கொடிய ஜனனமும் வந்து சாரும். ஆதலினால், இக் கலைகளையெல்லாம் பூரணஞானமுண்டாகும்படி ஐயந்திரிபற விளங்கிக் கற்றுக் கொள்ளல் வித்துவான்களுக்குக் கடனாகும். எ - று. (௧௩)

## நூல் செய்த காலம்

வேறு

122. சகவருட மிரெண்ணூற் றெண்ணான்கு மிரண்டிஞ்
சரிந்ததற்பின் பொருந்திடுநந் தனவருட மதனின்
மிகவருடந் திடுமகரத் திங்கடனில் விளங்கி
வியப்புறுமூன் றாந்திகதி வியாழன்பூ சத்திற்
செகமகிழுஞ் சந்தான தீபிகையைத் தமிழிற்
செய்யுணூற் றிருபானுய்ச் சேர்த்துலகில் விளம்பு
மிகபரம்வேண் டினர்நாளும் படித்துணர்வார் கேட்பா
ரெனுமாசை தனைமனங்கொண் டிதனையுரைத் தனனே.

(இ - ள்:) சாலிவாகனசகாப்தம் ஆயிரத்தறுநூற்று முப்பத்து நான்கின்மேல் நிகழ்ந்த நந்தனவருஷத்தில், தைமாதத்தில் மூன்றாந் திகதியில், குருவாரமும் பூசநக்ஷத்திரமுங்கூடிய சுபதினத்தில், இவ்வுலகத்தில் இம்மை மறுமை இரண்டையும் விரும்புவோர் எந்நாளும் வாசித்து விளங்குவார்கள் (அன்றி அவர்களிடங்) கேட்பார்கள் என் ஆசையை மனதிற்கொண்டு, சான்றோர்களால் அங்கீகரிக்கப்பட்ட வடமொழிச் சந்தானதீபிகையைத் தமிழில் மொழிபெயர்த்து நூற்றிருபது செய்யுளாக்கிச் (சந்தானதீபிகை என்றே பெயர் கொடுத்து) இதனைச் செய்தேன். எ - று. (௧௪)

சந்தானதீபிகை மூலமும் உரையும் முற்றிற்று.